www.padippakam.com

# நனவெரிந்த சாம்பலில்

NANAVERINTHA SAAMBALIL

லோகன் செல்லம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# நனவெரிந்த சாம்பலில்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# நனவெரிந்த சாம்பலில்

## லோகன் செல்லம்

**DANSK TAMILSK PUBLICATION**
**in collaboration with**

20/2, ஜக்கரியா காலனி, முதல் தெரு,
சூளைமேடு, சென்னை - 94
தமிழ்நாடு இந்தியா

படிப்பகம்

www.padippakam.com

# NANAVERINTHA SAAMBALIL

(A Collection of Poems)

- **Logan Chellam**

**Publisher:**
**© Manoranjani Loganadan**

**Straussvej 24**
**7500 Holstebro**
**Denmark.**
**Ph.: 0045 28363891**
**mail : logan.chellam@gmail.com**

**Mithra First Edition**
January 2012

ISBN : 978-87-995026-0-8

Publication Editor
**Espo**

Pages : 144

Printed & Published by
**Mithra Arts & Creations Pvt Ltd.,**
20/2, Zackria Colony, 1st Street,
Choolaimedu, Chennai - 600 094.
Ph : +91 44 2372 3182 / 2473 5314
Email : mithrabooks@gmail.com
www.mithra.co.in

படிப்பகம்

www.padippakam.com

## சமர்ப்பணம்

சமூகப் பற்றாளனாக
தமிழிய வைத்தியனாக
வாழ்ந்த ஒரு சமூகப்போராளி.

மேலும்...

குடும்ப வழிகாட்டியாக
தன் சொந்த மண்ணில்
நிறைவு வாழ்வு வாழ்ந்து
05.02.2007 அன்று
தனது 78வது வயதில்
இயற்கை எய்திய
எனது அன்புத் தந்தை
மாணிக்கம் செல்லத்தம்பி
அவர்கள் நினைவுக்கு

இந்நூல்
படையல்

படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்


1. ஒரு பார்வை
2. சஞ்சீவி
3. Appreciation
4. என் சொல்
5. அயல் வாழும் எம் வீடு ...!
6. அன்பான அம்மா ...!
7. நூலேந்திய பட்டம்...
8. மயிராய் மதிபடும்...?
9. முடிவிலி...
10. சுப முகூர்த்தம்
11. நிச விழிகளிலே... !?... துரோகி...
12. நதியாடும் குப்பை கூளங்கள்...!
13. காவோலை காய்ந்த காலங்கள்...
14. தமிழ் புசித்த மச்சம்...
15. எங்கள் தேசம்
    - எழுந்து நில்லுங்கள்
    - வெளிநாடு
    - இரவல் வீதி
    - உறை பனி
16. எங்கேயும் நீ...!
17. அறிவித்தல்: "யாரும் இவ்விடத்தில் மண்வடு கட்டாதீர்"
18. நாய்மனம் அழுத கதை
19. எம் குருதி பருகும் நீங்கள்...!
20. தலையறுந்த சூர சம்ஹாரம்
21. எரிந்த வயிறுகள்...
22. ஆமைக் கோது மனிதன்
23. குளிர் செரித்த மண்ணில்...
24. என்(ன) வாழ்விது
25. நனவெரிந்த சாம்பலில்...!


படிப்பகம்

www.padippakam.com



26. கல்லிடை சொல்லி ஆறும்
27. வளர் பிறை
28. சுமைகாவும் சிறுதும்பி...!
29. ஊரும் உறவும் நித்திய மரணமாய்...
30. போரடிக்கும் அறுவடையால்
31. ஈர்ப்பு...
32. விடியா இரவுகள்...
33. எழுதுதல் வேண்டும்...?
34. இரந்து இரந்தார்க்கு ஈயும்...
35. பனி புணர்த்த நீங்கள்...!
36. நிலவுண்ட நெத்தலிச் சொதி...!
37. இறும்பூதல்...!
38. உடைக்க முடியாப் பூட்டு...
39. கல்லில் நாருரித்த தலை...
40. ஒரு முரண்பாட்டுக்கு மீசை அரும்பிய காலம்
41. அம்மா அடைகிடக்கும் போது சும்மா நீ குழப்பாதே
42. மறு பிறப்பு...
43. பாடல்: எந்தன் தென்றலே நீ வீசி வா
44. இருள்...!
45. மரம் காய்க்கும் மனிதம் வேண்டும்...!
47. நானுறங்கி நாளாச்சு...!
47. தேற்றம் என்றால்

# ஒரு பார்வை

நனவெரிந்த சாம்பலில் என்ற இந்தக் கவிதா உலகில், காலடி உடுத்துவைக்க விளையும் கவிதைப் பிரியர்களான உங்களை, இந்த நூலின் நுழைவாயிலில் அல்ல இந்தக் கவிதா உலகின் தலை வாயிலில் வைத்துச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். கவிதைத்தேரிலே உலாவருவதில் அவா உள்ளவன் என்ற வகையிலிலும் இந்தக் கவிஞனுடனும் அவனது கவிதைகள் வலம் வரும் வாழ்விடங்களிலும் வாழ்ந்துவந்தவன் என்ற வகையிலும் என்னுடைய மனப் பதிவுகளை உங்கள்முன் சமர்ப்பிப்பதில் மன நிறைவடைகிறேன்.

சங்ககாலம் தொடக்கம் இன்னைற காலம்வரை தமிழினமும், தமிழ்க்கவிதா உலகமும் பல கலகங்களைக் கண்டிருக்கின்றன. பல்வேறுபட்ட அடக்குமுறைகளை அனுபவித்திருக்கின்றன. பல தரப்பட்ட எழுச்சிகளை எதிர்கொண்டிருக்கின்றன. பல்வேறு பொருள்பட்ட மறுமலர்ச்சிகளை சந்தித்திருக்கின்றன. வரலாற்றின் ஏடுகளைப் புரட்டிப்பார்த்தால் தமிழன் சாம்ராஜ்யங்களை கட்டி ஆண்ட காலங்களில் தமிழ்க் கவிதைகள் வலுவிழந்து துதிபாடும் பாக்களாகவோ அல்லது அந்தப்புரத்தின் அந்தரங்கங்களை வர்ணிக்கும் அலங்காரப் பூக்களாகவோதான் இருந்து வந்திருக்கின்றன. மாறாக தமிழன் அடிபட்டு, துடிபட்டு, துயரப்பட்ட காலங்களில் தான் தமிழ்க் கவிதைகள் தரமுயர்ந்து தலைநிமிர்ந்து நிற்கின்றன.

இன்றைய ஈழத் தமிழரின் போராட்டகாலம் தமிழ்க் கவிதா உலகின் பொற்காலம் என்றே கூறவேண்டும். போராட்ட காலத்தில் வாழும் கவிஞர்கள் படைக்கும் நெருப்புக் கவிதைகள் ஒருபுறம், சொந்த மண்ணில் இருப்புக்கள் பறிக்கப்பட்டு அந்திய மண்ணில் வாழ்வை நகர்த்தும் எமது கவிஞர் லோகன் செல்லம் போன்ற ஈழக் கவிஞர்களின் ஈரக் கவிதைகள் மறுபுறம் என்று தமிழ்க் கவிதா உலகம் புதுப் பொலிவுபெற்று விளங்குகிறது.

போராட்ட களத்தில் வாழும் கவிஞர்களின் உணர்வுகளிலிருந்து இருப்புக்கள் மறுக்கப்பட்ட நிலையில் அகதிகளாய், அனாதைகளாய்

www.padippakam.com



புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் வாழும் ஈழக் கவிஞர்களின் மனக் குமுறல்கள் பல விதத்திலும் வேறுபட்டு நிற்கின்றன. புலம்பெயர்ந்த கவிஞர்களின் கவிதைகளில் இருப்புக்கள் பறிக்கப்பட்டது தொடர் பான விபரணங்கள், கடந்த காலம் பற்றிய ஏக்கங்கள், பிரிவுத் துயரங்கள், எதிர்காலம் பற்றிய அவநம்பிக்கைகள் என்பன தொக்கி நிற்பதனை காணக்கூடியதாய் இருக்கும். இவற்றை கவிஞர் லோகன் செல்லத்தின் 'நனவெரிந்த சாம்பலில்' வரிக்கு வரி உணரக்கூடிதாக இருக்கின்றது.

இந்த புலம்பெயர் வாழ்விற்கு முன்னரே கவிஞர் லோகன் செல்லத்தின் அறிமுகம் எனக்கு கிட்டியிருந்தது. இன்று போல் நெருங்கிய நண்பனாக அல்லா விட்டாலும் மாற்றுப் பாசறையின் ஒரு தோழன் என்ற வகையில் அவ்வப்போது அவரை நான் அறிந் திருந்தேன். அன்றுமுதல் இன்றுவரை அவர் ஒரு நல்ல கவிஞர் என்பதில் என்றுமே எனக்குச் சந்தேகம் எழுந்ததில்லை. தன் கவிதையின் கருத்துக்கள் வேறு, தன் வாழ்வின் நோக்குகள் வேறு என்று அவர் அன்று வாழ்ந்திருந்தால் இன்று இந்த அந்நிய மண்ணில் அகதி வாழ்வினைத் தொடரவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் இவருக்கு இருந்திருக்காது.

நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல புலம் பெயர் கவிஞர்களால் தமிழ்க் கவிதா உலகம் புதுப் பொலிவு பெற்று வருகின்றது என்பது என்னவோ உண்மைதான் என்றாலும் பயிருடன் சேர்ந்து வளரும் களைகளைப்போல தரமான கவிதைகளுடன் சேர்ந்து தரமற்ற கவிதைகளின் எண்ணிக்கையும் துரதிஸ்டவசமாக அதிகரித்துக் கொண்டுதான் வருகின்றது. இதற்கு பின்னணியாக ஆக்கங்களின் பற்றாக்குறை, பத்திரிகை ஆசிரியர்கள், வாசகர்களின் கவிதா அறிவு தொடர்பான வறுமை, நேரப் பற்றாக்குறைகள், புலம் பெயர் நாடுகளில் உள்ள வசதிகள் என்று பல காரணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். தமிழ்ப் பண்டிதர்களுக்கே உரித் தான சொத்தாக கருதப்பட்ட தமிழ்க் கவிதை, தன் மரபுரீதியான கட்டுக்களை அறுத்துக்கொண்டு புதுக் கவிதை என்று ஒரு வடிவம் பெற்றது. இது ஒரு ஆரோக்கியமான மறுமலர்ச்சி என்பதனை மறுப்பதற்கு இல்லை. ஆனால் இன்று பல சந்தர்ப்பங்களில் கவிதைக்கும் நகைச்சுவைக்கும் வேறுபாடுகள் தெரிவதில்லை.

## 10

வசனங்களைத் தொடர்ந்து எழுதிக்கொண்டே போனால் கட்டுரை என்பது போலவும், வசனங்களை முறித்து முறித்து எழுதிவிட்டால் கவிதைகள் என்பது போன்றதுமான நிலமை வளர்ந்துகொண்டு வருகின்றது. இதனைப் பற்றி கவிஞர் லோகன் செல்லம் 'எழுதுதல் வேண்டும்.... என்ற தனது கவிதையில் பின்வபருமாறு கூறுகின்றார்.

*தொலை நோக்கற்ற ஏதாவது*
*ஏதாவது வில்லண்டமாய்*
*விதண்டாவாதமாய்...*
*எழுதுதல் வேண்டாம் என*
*எழுதுதல் வேண்டும் என்று குறிப்பிடுகின்றார்.*
*இந்த வகையில் கவிதையில் எது இருக்கிறதோ*
*இல்லையோ கவிதைத் தன்மை இருத்தல் வேண்டும்.*

'நனவெரிந்த சாம்பலில்' கவிதைத் தொகுதியின் படைப்பாளி பொழுது போக்குகளுக்காகவோ அல்லது போலித்தனங்களுக் காகவோ கவிதை எழுதும் கவிஞர் அல்ல. இவர் மட்டுமல்ல இவருடைய கவிதைகளும் தனித்துவமானவை. இவர் பயன்படுத் தும் படிமங்கள் பதப்பிரயோகங்கள் என்பன புதுமையானவை.

உதாரணமாக நிலவினை காதலியாகப் பார்த்தவர்கள் உண்டு. காதலுக்கு உதவியாக நிலவினை அழைத்தவர் உண்டு. ஆனால் இவர் அதே நிலவினை தன் மாமன் என்று உறவு கொண்டாடுகின்றார். 'நிலாவுண்ட நெத்தலிச் சொதி' என்ற கவிதையில்...

*இந்த வெளியூடே*
*எம் வயல் வெளி நிரம்பி*
*அடி நிலங்கள்*
*கசிந்தோடும் நிலவது*
*எனதினிய இரத்த உறவு*
*மாமன் எனக் காட்டி..*

இதனைத் தொடர்ந்து செல்லும் இவரது கவிதையில் வடபுலந்து இருளிடையில் மறைந்துபோன இவரது மானனை நீண்ட காலம் காணவிலையாம்.

அதனைத் தொடர்ந்து இவர் பயன்படுத்தும் பின்வரும் வரிகள் சொத்தாதிக்கம், தனிமனித உரிமைகள், சமத்துவம் பற்றி எம்மைச் சிந்திக்க வைக்கிறது.

*அவர் புதைந்த*
*அண்ட வெளிப் புதருக்கு*
*சொந்தக் காரர்*
*யார் யாரோ..!?*
*அது நீங்களாயின்...,*
*பங்கு எனது பற்றி*
*எல்லை பற்றிப் பேசல் வேண்டும்.*

இந்தக் கவிதைத் தொகுதியில் என் மனதில் பதிந்த அல்ல என் மனதைக் குடைந்த கவிதைகளில் ஒன்று ‘அன்பான அம்மா...’ என்ற தலைப்பிலான கவிதை

புலம் பெயர்ந்து வாழும் எங்களுக்கும் சொந்த மண்ணில் வாழும் எம்முறவுகளுக்கும் இடையில் ஒருவகையில் பாலமாய் இருப்பது இந்தக் கடிதம்தான். ஆனால் அந்தக் கடிதம் வந்து அதனை முதன்முதலாய் வாசிக்க முற்படும்போது ஏற்படும் உணர்வை அவர் விளக்கும்போது...

*தொகை ஏதும் கேட்பாரோ..*
*அங்கெவர்க்கு உயிர் போய்ச்சோ...*

உறவுகளின் தொடர்பு அறுந்த அகதிகளின் உள்ளத் துடிப்புக்களை விளக்குவதற்கு இந்த இரண்டு வரிகளுமே போது மானதாகி விடுகின்றன. எல்லாவற்றையும் விட இக்கவிதையில் இறுதியாக வருகின்ற பின்வரும் வரிகள் இன்றைய அகதி வாழ்வின் அவலங்களை படம் பிடித்துக் காட்டுவதாக அமைக்கின்றன.

*தடிப்பிடி முறிந்து - சில*
*வட்டுக் கம்பிகளும் வளைந்து - அதன்*
*கூரையான சேலையில்*
*பீத்தலும் பொள்ளலுமாய்*
*கிழிந்த குடையில் - மிக*
*அழகான குஞ்சங்கள் தொங்கிட - என்*

*மனக்கண்ணுள் அவைகண்டு*
*மகிழ்ச்சியில் நெகிழ்கின்றேன்.*

போராளியாக பல ஆண்டுகள் வாழ்ந்த பின் ஏதேதோ காரணங்களினால் அமைப்பினை விட்டு ஒதுங்கி சாதாரண வாழ்வியலுக்கு மாறுகின்றவர்களின் மனவுணர்வுகளை வெளிப்படுத்துவதாக 'குளிர் செரித்த மண்ணில்' என்ற தலைப்பிலான கவிதை அமைகின்றது.

தாம் அறிந்த உண்மையினை, அராஜகங்களை. அநியாயங்களை பிறரிடம் பகிர்ந்து மனம் ஆறக்கூட முடியாமல் தமக்குள்ளயே புதைத்து வைத்திருக்கும் அத்துன்பத்தை பற்றி குறப்பிடுபோது:

*எரிந்த இரவுகளை*
*செய்தியாய்..*
*சிந்தனையாய்..*
*கனவாய்..*
*கவியாய்..*
*என்னிடை ஒழித்துவைத்தேன்.*

அச்செயல்களை வெளியே சொல்ல எதிர்நோக்கும் அச்சங்களை விளக்குவனாய் அடுத்து வரும் வரிகள் அற்புதமாய் அமைகின்றன.

*இருளொளி வெளியாய் மட்டும்*
*தெரியுமிந்த தொலைப் பொழுதில்*
*உனக்கு அவை வேண்டாம்*
*வேண்டவே வேண்டாம்.*

இந்த வார்த்தைகள் கவிஞர் லோகன் செல்லத்திற்கு மட்டும் பொருந்துவதாக எனக்குத் தென்படவில்லை. விடுதலை அமைப்புகளால் பாதிக்கப்பட்டு அந்நிய நாடுகளில் உடலையும் கடந்த காலங்களின் நினைவுகளையும் அலையவிட்டவாறு நாட்களை நகர்த்தும் அத்தனை முன்னாள் போராளிகளுக்கும் இது பொருத்தமானதாக தென்படுகின்றது.

'நனவெரிந்த சாம்பலில்' உள்ள கவிதைகள் ஒவ்வொன்றைப் பற்றியும் தனித்தனி பேசவேண்டுமானால் இந்தப் புத்தகத்தின் பல

பக்கங்களை நானே உரிமையாக்க வேண்டிய நிலை வந்து விடும். இத் தொகுப்பினுள் உள்ளடங்கிய பல கவிதைகள் என் மனதுக்குள் சதா வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. இக் கவிஞனின் சில கவிதை கள் பகைவர்களின் பிடியில் இன்று சிக்கித் தவிக்கும் எம் மண்ணின் வட கடலோர எல்லைகளுக்கு அழைத்துச் சென்றுவிடுகின்றன.

இன்னும் சில கவிதைகள் பல வருடங்களுக்கு முன்னர் நடந்து முடிந்துவிட்ட கனமான நினைவுகளை மனக் கண்முன்னே கொண்டுவந்து நிறத்திவிடுகின்றன. குறிப்பாக பின்புலம், நதி யோட்டம், அறுவடை, துரோகி அறிவித்தல், எம் குருதிபருகும் நீங்கள், நனவுகள் எரிந்த சாம்பலில் போன்ற தலைப்பிலான கவிதைகள் என் கருத்தினைக் கவர்ந்தவை.

நான் இந்த உரையை எழுதுவதன் நோக்கம் இக்கவிதைத் தொகுதியை திறனாய்வு செய்வதென்பதல்ல. மேலும் திறனாய்வுப் பொருளுடன் ஏதாவது ஒரு வகையில் தொடர்புபட்டு இருக்கும்போது திறனாய்வு நிட்சயம் நடுநிலமை தவறிப் போய்விடுவதற்கு வாய்ப்புகளை நிறையவே கொண்டிருக்கும். இந்த வகையில் இந்தக் கவிஞனுடனும் இவனது கவிதைகளுடனும் உள்ள என் ஈடுபாடுகள் நடுநிலையான ஒரு திறனாய்வுக்கு வழி வகுக்காது என்பதனால் அதனை நான் தவிர்த்துக் கொள்கிறேன்.

எல்லாவற்றையும் விட மேலாக திறனாய்வு என்ற பெயரில் இலக்கிய உலகில் நிகழும் பனிப்போர்களில் எனக்கு உடன்பாடு களும் கிடையாது. 'நனவெரிந்த சாம்பலில்' கவிதைத் தொகுதியில் வருகின்ற ஓர் இரு கவிதைகளில் ஒரே விடயத்தை ஒன்றிற்கு மேற்பட்ட இடங்களில் விளக்க முற்படுவது போல எனக்கு தென்படுகிறது. வாசகர்கள் தமது கருப்பொருளை விளங்கிக் கொள்வார்களா? அல்லது இல்லையா? என்று கவிஞர்கள் சந்தேகப் படும் கவிதையில் இவை நிகழ்வது வழக்கம் என நினைக்கிறேன். வேறு என்ன? நிறையவே எழுதிவிட்டேன் என்று நம்புகிறேன்.

காத்திரமான இக்கவிதைகள் படைத்த கவிஞனுக்கு என் மன மார்ந்த பாராட்டுக்களைக் கூறி என்னுரையை நிறைவு செய்கிறேன்.

செல்வன்

# சஞ்சீவி...

அது ஒரு காலம்.
சஞ்சீவிதான் எங்கள் பலரை இணைத்துக் கொண்டது.
சஞ்சீவிதான் எங்கள் பலரை பகைத்தும் கொண்டது.
சஞ்சீவி தனக்கென ஒரு இடத்தை பிடித்த நேரம்..

இந்த நினைவுகளும் கனவுகளும் கரைந்து போன நிலயில் இன்ற நனவெரிந்த சாம்பலில் என்ற இவனது கவிதைத் தொகுப்பு வெளிவருவதென்பது என்னைப் பொறுத்தவரையில் இது காலம் பிந்திய ஒரு சேதியாகும்

இலக்கியம் என்றும் நிலையானவை. இலக்கியப் படைப்புகள் எப்போதும் வரலாம். ஆனால் எப்போதோ வரவேண்டிய இவனது கவிதை நூலின் வெளியீட்டுக்கு பல சொல்ல முடியாத, எழுத முடியாத தடைகள் இருந்தன. ஆயினும் அது இன்றாவது வெளிவருவதை எண்ணி நான் மிகையாய் மனமகிழ்கிறேன். இவனது இந்த தொகுப்பு வேளைக்கே வந்திருந்தால் இவனது இரண்டாவது அல்லது மூன்றாவது.. எனப் பல தொகுப்புகள் வெளி வந்திருக்கலாம்.

சஞ்சீவி என்ற சஞ்சிகை டென்மார்க்கில் வெளிவருவதற்கு முன்னரே லோகன் செல்லம் ஆகிய எம்.சி. நிறைய எழுதத் தொடங்கிவிட்டான். நான் முதன்முதலில் அவனது வீட்டுக்குப் போனபோது ஒரு கொப்பியில் தான் எழுதிச் சேர்த்த கவிதை களை எனக்குக் காட்டி மகிழ்ந்தான் எப்போதோ...

கவிஞன் என்பவன் ஒரு காலக் கண்ணாடி என்பார்கள்.

ஒரு பிரச்சனையை வெளிப்படுத்துவதற்கோ - தெரியப்படுத்து வதற்கோ - அது மென்மையாக மக்களிடத்தில் போய்ச் சேர்வ தற்கோ இலகுவான ஊடகம் கவிதை என்பதில் நான் மிகுந்த உடன்பாடுடையவன். எவ்வளவோ பெரிய பிரச்சனைகளையும் ஒரு குறிப்பிட்ட சில வரிக்குள் அடக்கிவிடுவது கவிஞர்களுக்குள்ள சிறப்பு.

ஆனால்.. ஆனால் இவனுடைய கவிதைகளை நான் படிக்கும்போது உடனே எனக்கு இலகுவில் புரிவதில்லை. ஆழ்ந்து படிக்கும்போதுதான் அதன் சூட்சுமத்தினைத் தெரிந்து கொள்ளலாம். இவனுடைய ஒவ்வொரு கவிதைக்குள்ளும் உயிர்ப்பான கதைகள் பின்னணியில் இருக்கும்.

ஈழப் போராட்டம் பல பரிமாணங்களைக் கொண்டுள்ளது. அதற்குள் ஒவ்வவொருவரும் தங்களுக்கு ஏற்ற மாதிரியும் தாங்கள் ஏற்றுக் கொண்டதைச் சரி என்றும் நியாயப்படுத்தியும் எழுதியும் வருகிறார்கள். இந்த வேளையில் ஒரு கவிஞனோ அல்லது ஒரு கலைஞனோ சரியான நேரத்தில் உண்மையைக் கூறத் தவறு மிடத்து அவன் பொய்யாகிப்போகின்றான். நாட்கள் செல்லச் செல்ல அவன் மக்களிடமிருந்தும் அந்நியப்பட்டுபோவான். இந்த நிலையில் இவன் உயர்ந்தே நிற்கிறான். இவனுடைய கவிதைகள் எந்தப் பயங்கரவாதம் பற்றியும் இல்லாமல் எங்களுக்குள் நடக்கின்ற அரசியல் சமூக கலாச்சாரம் - பண்பாடு என பல கோணங்களிலும் இவனது கவிதைகள் உண்மையைச் சொல்கின்றது.

இங்கே பலபேருக்கு இவன் எழுதிய கவிதைகள்தான் தெரியும். இவன் மக்களின் இன்னல் நிறைந்த வாழ்வு நிலை பற்றி, தன்னைப் பெற்று வளர்த்த மண்பற்றி.. எனப் பல பாடல்கள் எழுதிக் கொண்டவன். இசையோடு அவை ஒரு நாள் வெளிவரும்போது இவனது பாடல்களும் உங்களில் பதியும். இதேபோல் நான் வாழும் நகரமான கொல்ஸ்ரப்புறோவில் ஒரு புகைப்படக் கண்காட்சியினை நடாத்தியபோது என்னால் படைக்கப்பட்ட அந்தப் புகைப்படங் களுக்கு இவன் எழுதிய இரண்டடிக் கவிதைகள் எனது படங்களுக்கு மேலும் உயிரோட்டமாய் இருந்தது. அவை அன்றே அனைவராலும் புகழ்ந்து பேசப்பட்ட ஒன்றாகவும் திகழ்ந்தது.

இன்று இங்கே புலம் பெயர்ந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் தாம் ஏன் புலம் பெயர்ந்தோம் என்பதற்கு ஆயிரம் காரணங்கள் உண்டு. எம்.சி. உண்மையில் தன் இளமைப் பராயத்திலிருந்தே தன்னை ஈழப் போராட்டத்துக்கு அர்ப்பணித்தவன். அன்றைய அவனது அரசியல் சூழலால் துரத்தப்பட்டவர்களில் இவனும் ஒருவன்.

ஆனால் இங்கு வந்த காலம் தொடக்கம் இன்றுவரையும் சமூக சேவை - அரசியல் எனப் பலவகையிலும் தன்னை இணைத்து செயலாற்றி வருபவன்.

எமது மக்கள் மத்தியில் நடைபெறும் சமூக கலாச்சார நிகழ்வுகள், நடைமுறைப் பிரச்சனைகளின் மத்தியில் எம்.சியின் ஈடுபாடு எப்போதும் இருக்கும். அதேபோல் டெனிஷ் மக்களுடனும் இங்கே வேறு நாடுகளில் இருந்து புலம் பெயர்ந்து வந்து வாழும் எந்த மொழி மத சமூக இனத்தவராக இருந்தாலும் அந்தப் பல்லின மக்கள் மத்தியில் இவனது செயற்பாடுகளும் தேவைகளும் இருந்துகொண்டேயிருக்கும்.

கவிஞன். லோகன் செல்லம் அதாவது எனது நண்பன் எம்.சியின் கவிதைத் தொகுப்பு வெளிவருவதில் நான் மிகவும் மனமகிழ்வடைகிறேன். தொடர்ந்தும் இவனது எழுத்துகள் தொகுப்புகள் வெளிவர வாழ்த்துகிறேன்.

நண்பன் முரளி

www.padippakam.com

## APPRECIATION

In 1997 I met MC (Logan Chellam) for the first time. He often visited Kulturhuset (The House of Cultures) in Holstebro, Denmark. At this time this was a meeting house for foreigners and Danish people. MC and other Tamils had their base in Kulturhuset, where they published and distributed their magazine 'Chanchive' – a magazine regarding their lives in a foreign country. 'Chanchive' was first published in 1989.

During the jubilee anniversary of Kulturhuset, I was working as the managing director, and asked MC and his friends to publish our anniversary magazine. During this time, I came to know how friendly MC was. I also met his wife, Ranji, and their children,Thisaant, Gavin and Vithun. A confident, close and nice friendship developed with their whole family. MC's family shows me, that it is not only possible, but also surprisingly easy to practice two cultures. One can live every day whilst maintaining ones original language, traditions and culture, simultaneously learning the mannerisms of a new culture. It is therefore natural for MC to write his poems in his mother tongue – precisely like Danish poets do! It gives you the opportunity to get feeling, where you come from. It illustrates the surroundings, and the richness in your roots. Both are important and necessary to use ones native tongue. MC talks in his mother tongue with his children - precisely like Danish parents do!

MC's poems contribute to an understanding, which shows, that culture is always changing. They are poems between cultures. His Poems are about life and about the state

படிப்பகம்

www.padippakam.com



of the world. The poems are like a bridge, which takes you to new places. The poems show the suffering in life but they also show joy and energy. The poems indicate the necessity to be engaged in society.

MC is a calm person. He does not make a big fuss about himself. He is modest and pleasant. His look is friendly and firm. He always listens, considers and reflects. He is a person, of whom you can count on. He usually works behind the scene. Hisdaily work is far away from poems. But the poems are in his blood, which connects with all in his life.

I would like to express my heartfelt congratulations with this collection of poems. And I am very happy to know him and his family.

**Karen Toft**

*Holstebro, September 2007*
*Anthropologist and teacher*
*karentoft@mail.tele.dk*

படிப்பகம்

# என் சொல்

நான் சொல்ல ஆரம்பிக்கும்போதே பல விடயங்களை சில உதாரணங்கள் மூலம் விளக்கி அல்லது கோடிட்டுக் காட்டவேண்டியமை முக்கியமாகிறது. அவை யாதெனின், உலகத்தில் முழுமையானதாய் தூய்மையானதாய் ஏதும் இல்லை. இவை இப்படி இருக்கும்போது எனது சொல்லான எழுத்திலும் ஏதோவோர் வகையில் குறைநிறைகள் தன் பங்கையும் எனையும் மீறி உட்கொண்டிருக்கும்.

எம்மில் தோன்றும் சில நோய்க் குறியீடுகளை முன்வைத்து அதன் மூலமாக உண்மையான நோயைக் கண்டறியலாம். அப்படியும் முனையும் போது நோயும் அதன் காரணிகளும் குணங் குறிகளும் வேறு வேறாய் இருந்து, மருத்துவத்தினால் அந்நோயை குணப்படுத்த முடியாமல் போய் மரணித்துப் போன உயிர்களைப் போல எம் வாழ்வும் - எதிர்காலமும் நம் முன் குறைபட்டதாய்க் கிடக்கின்றது.

இதனிடைதான் தீ பட்டுப் பொங்கி எழும் பதார்த்தத்தின் மேற்தளத்தில் நுரைப்படையாய் சில உள்ளீடுகள் அழுக்குப் போன்று ஒதுங்கும். அதற்கு ஒப்ப நானும் என் போன்ற மக்களும் இப்படிப் புலம் பெயர்ந்து ஒதுங்கி போயினோம்.

இதனை நான் எழுதும்போது கவலை என்ற பாறாங்கல் ஒன்று என் மன மலையில் இருந்து சரிந்து விழுந்து உருண்டு புரண்டு திக்குத் திசை தெரியாது எக்கு எழந்துவந்து மீண்டும் என் இதய வேர்களை அலைத்து அறுத்து ஏதேதோ செய்கிறது. இப்படியான வேதனைகளை - சுமைகளை - சுகங்களை நான் அவ்வப்போது எழுதிவைத்தேன். அப்படி எழுதியவைதான் இப்படிக் கவிதையானது. ஆனாலும்..

கவிதை என்பது கனமானது. ஆயினும் அது சுகமானது. சுவாரஸ்யமானது. அது எங்களின் அண்டவெளி போன்று வியாபித்த சுதந்திரத்தை தனதாக்கிக் கொண்டது. அதனுடன் முரண்பட்ட எந்த மனிதமும் அதனால் அழிக்கப்பட்டதாக வரலாறுகள் கிடையாது என்பதனையும் புரிந்தேன்.

www.padippakam.com



அது படும் இன்பத்தை - துன்பத்தை, சல்லாபிப்பை, சதிராட்டத்தை அது சுமந்து செல்லும் ஆழமான மிக மென்மை யான சிந்தனையை, தேடலை, கருத்தை அதன் உண்மையான வருடலை புரிந்து கொள்வதென்பது....!

மனிதனின் ஆள்மனதைத் திறந்து உள்ளே சென்று அங்கே உண்மைக்காய் ஏங்கிக் காய்ந்து பாலைவனமாகிக் கிடக்கின்ற பகுதியினுள் உதிரத்தைப் பசளையாக்கி, வியர்வை வடிகாலில் நீராய்ப் பாச்சிப் பண்படுத்திய ஓர் மனிதத்தினாலேயே...

முழுமையான பிறைச் சந்திரனை மாதம் ஒருமுறையேனும் காண்பதைப் போன்று வாழ்வில் சில முறை முழுமை கொண்டது போல காண முடியலாம். நானும் முயல்கிறேன். உங்களால் முடியுமிடத்து எனக்குமாகச் சிறிய இடம் நிற்க.

மேலும் இதை ஒருநூலாக வெளிக்கொணர வேண்டுமென்று என்னைப் புரிந்த மனங்கள் எத்தனையோ தடவைகள் உரிமை யோடு கேட்டிருந்தார்கள். ஆயினும் அதற்கு வேண்டிய முயற்சி களை மேற்கொண்டபோதும் காலம் தானாக கடத்தப்பட்டுக் கொண்டே சென்றது. அதற்கான காரணங்கள் எனது சோர்வு என்றால்..!? அதனை என்னால் ஏற்கமுடியாதுதான். ஆயினும் அவையாவும் எனது மனப்பதிவிலுள்ள ஒரு கடந்தகாலம் மட்டுமே ஆகும்.

இருந்தும் அவ்வப்போது என் படைப்புகளின் கருத்துகளை யும் அடிமன உணர்வுகளையும் நிறைவாகவே புரிந்துகொண்ட எனது துணைவி நான் கவிதை எழுதும்போதெல்லாம் இது ஒரு நூல் வடிவம் பெறவேண்டுமென கூறுவார். இருந்தும் தடைக்கு மேல் தடைகள் தொடர்ந்தன. தடையானது. இதில் நான் அதனை விளக்கவில்லை சில கவிதைகளே அவைபற்றி இதல் எடுத்துச் செல்கிறது.

அத்தோடு இதனை பதிப்பகம்வரை கொண்டுசென்ற தர்மா அண்ணனுக்கும். படங்களை வரைந்துதந்த நண்பரான ஓவியர் சௌந்தருக்கும், எனது கவிதைப் படைப்பினை விருப்புடன் பார்வையிட்டு மனம் திறந்து முன்னுரை தந்தவரும். எனை அறிந்த வருமான எனது நண்பன் நடாவுக்கும், மகேஷ் அண்ணன் (கனகையா

www.padippakam.com



மகேசன்) அவர்களுக்கும். கமலநாதன் அண்ணன் (லண்டன்) அவர்களுக்கும், நான் புலம் பெயர்ந்து வாழும் டெனிஷ் சமூகத்தில் என்னோடு கருத்தாடல் செய்பவரும். தனது வாழ்த்தினையும் இம்மலருக்கு தந்த மானுடவியலாளர். கான் ரொவ்ற் அவர்களுக்கும் எனது நன்றிகள் சுமையாகும்.

எனது சஞ்சீவித் தோழமைகளான முரளி - தேவனுக்கும், அமரர். சிவா அண்ணன் (ஓவியர் சிவா) அவர்களையும் மற்றும் அமரர். கவிஞர் முல்லையூரான் அவர்களையும் இதில் நினைவு கூர்வதுடன், லோகநாதன். செ. என்ற பெயரில் வெளியாகிய எனது கவிதைகளுக்கு அன்பும் ஆதரவும் விமர்சனங்களும் வழங்கிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

எனக்கு கருவறையிலிருந்து தமிழ் புகுத்தி மொழியறையில் அவை பெருக்கி இன்று இவ்வுலகில் என்னை நானாக நடாத்தி வைக்கும் எனது பெற்றோருக்கும், ஆசான்களுக்கும், எனது மண்ணின் மக்களுக்கும் எனது இதய பூர்வ நன்றிகள்.

இந்நூலை சிறப்புறப் பதித்து வழங்கிய மித்திர பதிப்பகத்துக் கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

மேலும் இம்மலரானது எனது முதற் தொகுப்பாகும். இதனுள் உள்ளடங்கிக் கிடப்பவை, உங்கள் உணர்வுகளையும் தொடுமா..? என்பதனை இனிவரும் காலத்தை வாழவைப்பதற்காக மரணத் தையே எதிர்த்தும், காட்டாறாய் கொந்தளிக்கும் மனித இனத்தின் கல்லணையாய் எழுந்து நிற்கும் நீங்களே கருத்துப் பகிர்வீர்கள்.

அன்புடன்

லோகன் செல்லம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# அயல் வாழும் எம் வீடு...!

நெடிய மரம் வளர்த்து
நீர்பாய்ச்சி உரமுமிட்டு
நெடுநாளாய் காவல் செய்தோம்...

மடி நிறையக் கனி பறித்து
மகிழ்ச்சியுற்ற நேரமொன்றில்
இடி முழுங்கி வான்முகட்டால்
திடுமெனப் பெய்தது கோரமழை...!

தழை குழை கிளை இலையாய்
பரந்து செறிந்த
அழகான எங்கள் மரம்

நிலம் கிழித்து – அது
பாறும் என்றஞ்சி
கிளையொன்றை அதில் வெட்டி
காம்பொன்றை அதில் தறித்து
கோடரிக்குச் செதுக்கிச் செருகி

என் தந்தை
மனம் சோர்ந்த கைகளினால்
தறிபட்டுத் தறிகெட்ட நிலையாகி
காற்றெடுத்த திசைவாக்கில் – அது
எம் வீட்டின் மீதே வீழ...

அந்த மரச்சுமை தாங்காமல்
எலியோடி முதலாடி

www.padippakam.com



நிலையான கப்புகளும்
செத்தைகளும் விறகாக...!?

அலை பெருக்கி
புது வீடமைக்கும்
தகவான திராணியற்று
அயல் வீட்டார் பண்ணையிலே
எங்களுக்கு
ஒய்யாரத் தஞ்ச வாழ்வு...!

படிப்பகம்

# அன்பான அம்மா...

கண்ணயர்ந்து நான் விழிக்கும்
நாள் சிலதில்
கடிதம் அது
கதவோரம் வந்து விழும்.

என்ன...?
நான் அயர்ந்தால்
அது விழுமா...!?

அன்பான அம்மா,
ஒவ்வொரு காலைப் பொழுதும்
என் கண்கள் உனைத் தேடி
உன் கடிதம் தேடி
அலைபாய்ந்த நாட்கள் போய்...

இன்று ஏன்தானோ...!?
கனதியாய் வந்த
கடிதம் உனதை

எடுத்து...
பிரித்து...
படிக்க...
கண்கள் கலங்கி
கைகள் நாணி



www.padippakam.com



கால்கள் முடங்கி
அதிலேயே அமர்த்த...!

கடிதத்தின் உள்ளடக்கம்...?

தொகை ஏது கேட்பாரோ...
அங்கெவர்க்கு உயிர் போய்ச்சோ...
வேறேதும் துயர்ச்செய்தி
வருத்தக் காத்திருக்கோ...!?

எதனையும் நானறியேன்
கடிதமிதை அளையுமுன்
கேள்விகள் எனைக் குத்த...

மேசையிலே வங்கிமட்டை
அதிலோ அதிகமான இலக்கங்கள்...!?

இன்றைக்கு உள்ளதுவோ
0.00 மட்டும்.

இதற்கிடையே...
வயதேறும் குமர்த் தங்கை
படிப்பறுந்த எனதிளவல் – அவர்
தங்களுக்குள் ஏங்கிநிற்க...

எந்தன் தாய்க்கென்று
கை எனதெழுதி
அஞ்சலிடும் கடிதங்களை
இடைநின்று அபகரித்து
எனதுறவாவர் எவரோ சிலபேர்கள்...!?

இக் கிழியலுக்காய்...
சில கடுதாசி...
ஓர் உறை...

www.padippakam.com



ஒரு பேனை...
இரண்டொரு முத்திரைகள்...
என் சிந்தை நொந்து கொட்டிய
சிலபல எழுத்து வரிகள்...

இருந்தாலும் இவை யாவும்
எவராலும் விலைமதிக்கவே முடியாத
பொக்கிஷங்கள் – அவர்
இறுதித் திருட்டுக் கரம்பட்டு
கபளீகரம் செய்யும் வரை.

எனினும் இக்கடிதங்கள்
எனக்கும் – என்
பெற்றோர்க்குமிடையில்
எவரும் எத்தடை போடினும்
எங்கள் இதயம்
சுதந்திரமாய் உரையாடும்

அன்பான அம்மா...
உனதுரையான உன் குரல்...
என் செவியிடை அறைகிறது...

அதில்...
உனதுடலுள் எனக்காக
ஓரிடத்தைத் தந்திருந்தாய்
உனக்காக என்வீட்டில்
ஓரிடத்தைத் தரமுடியாமல்...!?
அவலமுறும் மனமிதுவே
தினந்தினமும் குமுறியழும்.

அது தன்னை
நிசப்தம் கொண்டு
அடங்கும் வரை...

www.padippakam.com



## இப்போதும்...!

வெண்பனி போர்த்துறைந்த
இயந்திர நாடிதனில் – எம்
முகமிழந்து முகவரியில்
நிலம் நோக்கி
தலை கவிழ்ந்து...

முகவுரை எரிக்கப்பட்ட பிரதியில்
முடிவுகள் எழுதி எழுதி
அழித்தழிந்தே தேய்பட்டு
கரைத் தடை பிடுங்கிய
ஓர் சிலேற்று மட்டையாய்...
நானிங்கு வாழ்ந்தபோதும்...

பேணையும்
மணிக்கூடும்
மோதிரமும்
வெளிநாட்டுக் கொம்பனியின்
மலிந்த சப்பாத்து. கையுறையோடு
குளிர்தடுக்கும் அங்கிபோர்த்தி

இப் பதிலை நானுனக்கு
அனுப்ப வரும்போது...!
தடிப்பிடி முறிந்து – சில
வட்டுக் கம்பிகளும் வளைந்து
அதன் கூரையான சேலையில்
பீத்தலும் பொள்ளலுமாய்
கிழிந்த குடையொன்றில்
மிக அழகான குஞ்சங்கள் தொங்கிட
எனக்குள் அவைகண்ட
மகிழ்ந்து நெகிழ்கின்றேன்.

17.01.1993

# நூலேந்திய பட்டம்

வளர்ந்துயர்ந்த
எங்கள் வளமும் வாழ்வும்

வைரமாய்...
சோத்தியாய்...
பசுமையாய்...
முதுமையாய்...

வேலியோரம் வளர்க்கின்ற
முள்முருக்கின் அழகிய கொம்பரில்...

தொங்கிக் கிழிந்து
கிழிந்தே தொங்கி
காற்றடிக்கும் திசையெலாம்
இழுபட்டுத் தானாடி...!

எவ்விசைக் காற்றிலும்
எத்திசை ஈர்ப்பிலும்
இசைந்து தானேறும் பட்டத்தின்
மாறுபட்ட இழுபாரமதை
தாங்கிடும் நூலுக்கொப்ப...

வாழ்வெமதின் மீதான
நம்பிக்கை என்பது
சமாந்தரத் தோற்றம் தரும்.

# மயிராய் மதிபடும்...?

மண்ணில் மலர்வதும்
மலர்வது மீண்டும்
மண்ணுள் புதைவதும்
மண்ணின் நிலைதான்.

ஆயினும்...
எதிலும் மேலான எந்த உயிர்களும்
மயிரினும் இழிவாய் – இந்த
மண்ணுக்குள் புதையும்.

அப்படி – எமை
பெற்று வளர்த்த
மண்ணைக் கிளறிட...

மயிராய்ப் போன
உயிர்களே வெளிக்காணும்
எம் தேசத்து மண்ணே
மயிர்மேடாய்க் காட்சி ஈகும்.

மண்ணென்ன...!?
அதன் மானுடம் எதிர்பார்க்கும்
எந்த விடிவும் வருவதற்குள்
மண்ணுக்காய் மயிரான
உயிர்கள் மேல்
ஏர்பிடித்தெம் கரங்கள்
அதன் மயிர் வேரற
உழுது செல்லும்.

www.padippakam.com



குருதி குடித்து குடித்து
பிதுர்த்துப்போன வயல் நிலங்கள்...
நிலா முற்றமும்
மீண்டும் மீண்டும்
எதிரியாய் எமைப் பார்த்தும்
எவரையும் மயிராய் பசளையாய்
அதன் வாய் கொள்ளும்
மண்ணின் பசி அடங்காது
என்றும்...!?

படிப்பகம்

# முடிவிலி...

பிணமாகிக் கிடக்கிறது
ஓர் மனிதம்...!

சிந்திய மூக்கும்
சிவந்த கண்ணும்
தலைவிரி கோலமும்
ஒப்பாரி ஓலமும்
எப்போதுயாய் எம் பிணிதொடர...

அம்மனிதம் – தன்
மனச் சுமையை...
கடமைகளை மரணித்தும்
மரணத்தால் ஒப்புவித்தும்
பிணமாகிக் கிடக்கிறது.



www.padippakam.com



இப்படி...!
ஓர் பொழுது போவதற்குள்
அதன் இடைக்குள்
ஏதேதோ நடந்திருக்கும்.

போனதோர் பொழுதொன்றில்
இம்மரணம் நிகழ்ந்திருக்க – தன்
மனிதத்தை மட்டுமிங்கு
விதைத்துவைத்த மனிதர்களில்
மனிதமாய் ஒன்று.

இது போன்று
மீண்டும் மீண்டும்...
மரணிப்பாய் வந்தடைய...

அழுகையும் ஆர்ப்பரிப்பும்
ஓலமும் ஒப்பாரியும்
எமதுடமையாய் ஆகிப்போச்சு...

இவை எமக்கோ
ஓயாத முடிவிலியாம் – இந்த
முடிவிலியின் ஓர் புள்ளியில்...!
ஓலத்தையும்...
ஒப்பாரியையும் தடை செய்வோம்...!?

பிணமாகப் போகும்
மனிதத்தை உயிர்ப்பிக்கும்
எதிர்கால மருந்தொன்றை
விரைவாகப் பயிர்செய்வோம்.

# சுபமுகூர்த்தம்

ஏதோவோர் திங்களில்
சுப முகூர்த்தம் குறித்து – சிலர்
சீர்வரிசைப் பேச்சோடு – பலர்
சீரற்ற நிலையூடு...

!?... பெண்ணியம் என்றொன்று
சமூக அடிமைச் சாசனத்தின்
முறைமைக்கு ஏற்ப – அது
அதுவாயே போக்கிடமற...?

ஏழ்மையின் உயிலொடு
இன்றும் ஓர் தாய்மை
தன்னுள்ளே எரிந்தொழிந்தாள்.

எரிவுகளும் எரியல்களும்
என்னகத்து மட்டுமல்ல
எந்தன் தாயிடமே அதிகமுண்டு.

இதில்
ஓருயிரைக் காப்பாற்ற
வக்கில்லா ஜடமொன்று
திருமண வாழ்வென்று
தட்டுவம் ஏந்தி நிற்க...

"மணவாளன்" பிறப்புக்காய்
ஒரு பெரிய தொகையும்
கல்வி கற்றிருந்தால்...!

www.padippakam.com



கடன் பெற்றிருந்தால்...!!
பிறிதுமொரு தொகையாக...

இங்கு ஆண்மைக்கும்
ஆண் குறிக்குமாய்
ஒரு வெந்தீசு
முன்பொருநாள் ஓர் தாயால்
இன்றதனால் இத்தாய்மை
நெஞ்சுள்ளே எரிமலைகள்.

கேட்போர் கேட்டிருக்க
கொடுப்போர்க்கு என்ன மதி...?

இது சுலபமல்ல
கொடுப்போர் மறுத்திருக்க
கேட்பார் கேட்டிடவோ...?

இவை புரியா
சமூக வாழ்வு எங்களதில்
அத்தனையும் அறிவூடு காண்பதற்கு...

மீண்டும் பண்பெனும்
அகர முதல எழுத்திருந்து
ஆலந்தின்ற தமிழ் பிழந்து
அறிநிலை புகுத்தி வைக்கும்
சமூகப்பள்ளி நாமாவோம்.

# நிச விழிகளிலே...!? துரோகி...

மனதெனதில்
ஆயிரமாய் எண்ணங்கள்
எங்கெங்கோ அலைந்திருக்க
வீடிருந்து நான்
பருத்தித்துறை நோக்கி
சைக்கிளை மிதிக்கின்றேன்.

என்னெதிரே...
தன்னுயிரை மதியா மாடுகள்
வண்டி முட்டும் நிறையாலே
முக்கி முனகலிட்டு
விக்கித்த பெருமூச்சால்
நின்றேன் நான் வெட்கித்து.

சுட்டும் விழி மூடச்
சத்த வெடியொன்று - உடன்
கிட்டத்தே கேட்டதனால்
நிலை தளர்ந்தேன் திக்கற்று...!?

துரோகி...!?
என்றதோர் பட்டம்
!...அவன் தோளில்
தொங்கக் கண்டு
அதிர்ச்சியல் அகண்ட விழி
அடுத்த கணம் சோர்ந்து மூட...

www.padippakam.com



தாளதனை தாவிப் பிடித்து
பிய்தெறிய
கரம் பிணைத்த கட்டினாலே
அவன் முகம் புடைத்து
வன்மங்கள் பேசிய வாய்க்குள்
மீண்டுமிரு வெடிகள்...!!

"நான் இழைத்த குற்றமென்ன...?
இந்த நாட்டில் பிறந்தது குற்றமோ...!?
இல்லை...
களவெடுக்காமல்...
பிச்சையெடுக்காமல்...
பிழைப்புத்தேடி வந்தது குற்றமோ...!!?

மீண்டும்...!
மீண்டும் மீண்டும்...!!
ஒலித்த வெடியில்
அவன் தலை சிதறி...

சன்னங்களாய்...
சன்னத்தின் தகர்வுகளாய்
அதிர்ந்து அலையாக...

இனம் பெருக்கும்
எந்தன் விந்துப் பையையும்
ஆயிரக் கணக்கான
சிந்தனைகளை உதிர்ந்த
மனத்துள்ளே தீ மூண்டு
தவியாய்த் தவிக்கின்றேன்.

www.padippakam.com



அந்த...
தெக்கித்த மாடுகளும்
துவண்டு சுருண்ட மனிதனும்
மனிதமாய்க் கேட்ட உண்மைகளும்
இவன் போன்ற
எத்தனையோ மனிதங்களையும்
சுமந்துகொண்டு...

அப் பகல்
ஆழக் கரைக்குள்
அழிழ்ந்தெங்கோ போயிற்று.

23.06.1985

படிப்பகம்

# நதியாடும் குப்பை கூளங்கள்...

மக்கள்...!

அடித்தேகும் நதிநீரில்
புரண்டோடும் கூளம்போல்...

அலையலையாய்...
அகதிகளாய்...
எங்கெங்கெலாம் தஞ்சங்கொள்ள
இடம் மாறிப் போனார்கள்.

அவர்கள் இன்றுபோல்
என்றும்... என்றென்றும்...
இடம் மறந்து... புலம் பெயர்ந்து
மனதிடையே சொந்த வேரறுந்து
டம் மாறிப்போவார்கள்.

இப்படி...
நிதமான கடும் வாழ்வில்
கொடும் கரங்கள் குட்டும்போது
அவை தடுத்து
நெஞ்சுயர்த்தி விழிசிவக்க
நெடிய போர் செய்தாலும்

சமூகநிலை எங்களதை
தகர்க்கின்ற கருத்தின்றி...

www.padippakam.com



தினம் ஊர்பிரிக்கும்
கொலைக் களங்கள் வாழும்வரை...

அலையாய்... அகதியாய்
இந்த நிதியோட்டம்...
காலம் கடந்தும்
நீண்டு செல்லும்.

இந்த அலையுள்
அலையும் அகதியாய்
நதியாடும் குப்பை கூளத்துள்
நானுமொன்றாய்...!!!

படிப்பகம்

# காவோலை காய்ந்த காலங்கள்...

முன்பைவிட இது
புதுச் சமூக மாற்றங்களை
பெரிதாகக் கொண்ட வாழ்வாகித் தெரியும்...!

இதன்மீது
இனியும்...
புதிய மாறுதல்கள் படிமமாகின்...!?
ஆகும்.

இக்கணம் வாழ்கின்ற
புதுமையான வாழ்வு
நேற்றதன் பழமையாய்த் தோன்றி...
தோன்றியே மடியும்போது...

நெடு மரமாய் வளரும் புல்லு
தனை வளர்க்க முளைத்த குருத்தை
முற்றிப் பழுத்த முதுமையில் சேர்த்திட....

அவை
தொப்புள் கொடியின் பழுத்த நிலைபோல்
காவோலைகள் என்றாகி
கங்கிலே தொங்கி
காற்றிலே ஆடிட...!

புதுமைக் குருத்தும்
தான் மட்டும் உலகிதில்

www.padippakam.com



இனிவரும்காலப் புதிதென
பல் தனை இளித்திடும் காலமாய்...!?

இக் காலமும்
சில காட்சியாய்த் தொங்கும்.

தொங்கியும் வாழும்
சிலகாலம்.

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் புசித்த மச்சம்

வங்கக் கடலின் ஆழத்தை
தமிழினமே அறியும் அதிகம்.

ஒரு சுழியோடி அறிந்ததிலும் – நாம்
அறிந்தவை பெரிதவைதாம்.

காற்றுண்டு ஆர்ப்பரித்து
அலை மோதி
நுரை காவிக் கரையேகி
நிலம் எமதை தினமுண்ணும்
வங்கக் கடலடியில்...!?

கல்சுமத்தி உள்ளெறிந்து
உடல் கிழித்து
உயிர் துறந்தோர் தமை...!



www.padippakam.com



ஆழத்தை முகர்ந்து
கவிச்சற் சுரியிடை போன
கல்லணை மனிதரை
அளைந்து உள்ளறுத்து
கிண்டிக் கிளறி
உண்டு உறவாடிய
மச்சங்களை விடவும்...

சுவையாக
தினமும் தமையுண்ட
மனித இனத்தவரை

இரையாக
அடி நீருள்
கடித்துக் குதறி
பிய்த்து இழுத்து
இரசித்தச் சுவைத்து
மென்று விழுங்கி
கொழுத்து வளர்ந்து

தமதினம் பெருக்கி – இனம்
எங்கள் பிணம் தின்னும்
வங்கக் கடலேகும்
மச்சங்கள் மட்டுமேயாம்.

படிப்பகம்

# எங்கள் தேசம்

## எழுந்து நில்லுங்கள்

எழுந்து நில்லுங்கள்
எல்லோரும் ஓர் தடவை
எழுந்து... நில்லுங்கள்...!

எரிந்து கொண்டிருக்கும்
எங்கள் தேசத்தை
எட்டிப் பார்ப்பதற்கு...

எல்லோரும் ஓர் தடவை
எழுந்து நில்லுங்கள்...!!

தேசம் எங்களதை
எங்கள் தேசமாய்க் காண
ஏம்பலித்து உயிர் தந்துபோன
அனைத்து மனிதரையும் – எம்
மனதில் பதிந்து கொண்டு

எல்லோரும் ஓர் தடவை
எழுந்து நில்லுங்கள்...!

வெட்கக் கேடு
எமை அடித்து வெருட்டிய
அந்த மண்ணை
எரிந்து கொண்டிருக்கும்
அந்த மண்ணை
எமை அகதிகளாக்கிய

www.padippakam.com



அந்த மண்ணை
எமை அகதிகளாக்கிய
அந்த மண்ணை
எப்போதும் இனிமையாய்
பசுமையாய் சிரிக்கின்ற
எங்கள் மண்ணை
ஒரு தடவையாவது
எட்டிப் பார்க்க

எழுந்து நில்லுங்கள்...!
எல்லோரும்...
எழுந்து நில்லுங்கள்...!!

குமுறும் எரிமலையாய்
தினமெரியும் எங்கள் தேசமே...!

வங்கக் கடலின் பட்டிணிக்கு
இரையாகும் எங்கள் மண்ணே...!!

நீ விளைந்த கல்லுடைத்து
அதிலேதோ உருவம் செய்து
அல்லும் பகலுமாய்
அதற்குப் பாலூட்டி
கற்பசி தீர்க்கும்
எமது மக்களின்
இன்பங்கள் காண்பீரோ...!?

சொந்த மண்ணில்
எங்கள் மைந்தர்
உணவின்றி மனமெரிந்து
உடல் மெலிந்து
உயிர் நீக்க

இங்கோ...

www.padippakam.com



பணக் குருவியினை
பத்திரமாய் அடகு வைப்பர்
நலிந்துபோன நண்பன் வீட்டில்..

அப் பணக் குருவி
வட்டி குட்டியாகிச் சீட்டாகி
சிறகடித்து
மெல்ல மெல்ல வெளியே வர
எமது நண்பன்
என்பும் தோலுமாகி
மனம் வெந்து செத்தப் போவான்
அவன் செத்தே போனான்.

இதன் போதும்
குருதி பாயும்
எம் தேசத்து எண்ணங்கள்
எங்கெங்கோ உறங்கிக் கொள்ள...

ஒளியெழுந்து வரும் இடமிருந்து
நாமெழுந்து அதன் நடை தொடர்ந்து
பாதமதை பதிந்து கொண்டோம்.

நாமெழுந்து வருகையிலே
எமதுறவுகளும் நிழலாகி
நாம் கனவுலகில் படுத்திருக்க
உருவிழந்ததோ எங்கள் காலம்.

எங்களின் உயிருக்கான போரில்
ஈடாடி உருக் குலைந்ததோ
எங்கள் தேசம்.

www.padippakam.com

# எங்கள் தேசம் 2

வெளிநாடு

இங்கு உணவிருந்தும் உண்ணாத
உருசி செத்த காலமாச்சு.

பஞ்சணை மெத்தையில் படுத்துறங்கி
மேனி நொந்ததிலே
பலர் தூக்கம் கெட்டேபோச்சு.

இத்தனைக்கும் வெடியுழுது
பசுமை செத்த மண்ணெமதில்
ஒரு வேளை உணவுக்கு
அழும் குழந்தை ஏராளம்.

அவர்கள் நலமான
நித்திரை கொண்டு கனகாலம்.
அவர் கண் விழித்து
கல்வி கற்க ஏதுமின்றி
இளவயதில் முதுமையானோர்
ஆயிரம் ஆயிரம்.

அவர்கள் அழுதழுது
கண்களும் குளங்களாகி

அக் குளங்களுக்கு
அர்த்தமே அற்றே போச்சு.

# எங்கள் தேசம் 3

## இரவல் வீதி

அடுப்பெரிக்கும் பெண்களை
எத்தனை காலந்தான்
எரித்திடுவீர் அடுப்பினுள்ளே...!?

நிலையிது மாற்றி
புதுநிலை அறியாவிடின்
எம் மண் விடியா...
விடிந்துமது விடியா.

ஆண்களே...!
மார்தட்டும் எங்களினம்
இங்கு யார் வீட்டில்
தஞ்சம் கொண்டீர்...!?

எங்களின் சமூகக் கட்டான
சாதி – மத – பேதத்துள்
கிடந்துளர்ந்த பெண்களும்
குழந்தை மனிதர்களும்
தங்கள் உயிர் கொடுத்து
தம் எதிர்காலம் அழிக்கையிலும்...

அகன்ற மார்போடும்,
இழந்த முகத்தோடும்,
நாமிங்கு இரவல் வீதியிலே...!

வெள்ளையர்...

www.padippakam.com



தெருக்களிலே சிலவேளை
விரலடிப்பர் எமைப் பார்த்து...

அவர் கறுத்தப் பன்றியென்று
தொடங்கிடும் வசை வதைகள்...

ஓடிப்போ உன் தேசமென்று
நிறத்துவேச வக்கிரத் திமிர்காட்டும்...
எத்தனையோ வசைகளுண்டு...!!

அவையெலாம் எங்களுக்குப் பெருஞ்சூடு.

ஆனாலும்...!?

சூடு சொறணையற்ற மரங்களாய்
எங்களுக்குள் சாதி வகை
பிரிவுகளை மறைவிற் பார்த்து
இங்கேயே தொடர்கின்றது
எங்கள் வாழ்வு.

இதற்குள்ளே இறந்த காலம்
என்ற நிழல்
அடிக்கடி எமக்குள்
வந்து போகும்...

அதில்...

வேலியோர முள் முருங்கை
செம்பவளப் பூச் சொரியும்.
சிவந்த சொண்டுக் கிளிகளங்கே
பூக்களதைச் சீண்டிவரும்.

www.padippakam.com



பார்த்திருந்து நாம்
கவண் கட்டிக் கல்லடிப்போம்.

இப்படி இன்னுமின்னும்...
ஆயிரமாய் நினைவு வரும்.

சில பேர்க்கு
நுரை தள்ளும் பனங்கள்ளுவரும்.
அதனுடனே
சுட்ட கருவாடு வரும்.

மாலை நேரக் கொத்துரொட்டி
மணம்குணமாய் தியக்கவைக்கும்.

இன்னுமின்னும் எத்தனையோ...!
திருவிழாக்கள் வரும்.
கீரிமலைக் குளிப்பு வரும்.

இப்படித்தான் ஆயிரமாயிரமாய்
எமக்கு மிஞ்சும் நினைவுகளில்
எங்கள் தேசம்.

# எங்கள் தேசம் 4

## உறை பனி

நாம் பிறந்த மண்மீது
பச்சை நிழல் மறைந்து போச்சு – அந்த
நினைவுகளின் மேற் படுத்து
நிம்மதியும் அழிந்துபோச்சு.

எங்கள் புலப் பெயர்வில்
தென்றற் காற்றும்
பாறையாய் மோதி – எம்
மூக்குடைத்தே போகின்றது – இங்கு
உறை பனியாய்
வாழ்வெமது இறுகி...

அவை
பஞ்சுபோலவும்
தென்றலாகவும்
தண்ணீராகவும்

மெது மெதுத்து
கல கலத்து
சல சலத்து

கல்லாய்
மண்ணாய்
பனியாய்
அகதியாய்...

www.padippakam.com



எம் நினைவு தேடும் தூரத்தில்
எங்கள் தேசம் தொலைவிலாச்சு.

எழுந்து நில்லுங்கள்
எல்லோரும் ஓர் தடவை
எழுந்து... நில்லுங்கள்...!

(17.11.1995 அன்று Denmarkஇல் உள்ள Trige என்ற நகரில் நடைபெற்ற கவியரங்கக் கவிதை.)

படிப்பகம்

# எங்கேயும் நீ..!

ஏதுமே அறியாத...!
மூளையும் முளைக்காத...!!
குண்டுகளைத் துப்பி – எம்
மண்டைகளைத் துளைக்கும்
வன்மத்துக்கு துணைதேட....

தெருநீளக் கரையோரம்
நிர்வாண உடலாகி
ஊர்விடுப்புப் பார்த்து நிற்கும்
நெடுதுயர்ந்த கம்பத்தில்...!?

உன்னதோ
என்னதோ
அகப்பட்ட தலையினால்
உயிர்களைப் போக்கிட...!?

வண்ணச் சாயங்கள் பூசாத
மின்கம்பத் தூணுனக்கு – எம்
மனிதக் குரலவலம்
கான இசையாகி...
குருதிக் குளிப்பாகி...
மரண தாண்டவத்தை – நின்
காலடியில் ஆடிடும் கம்பமே...!?

இன்னும் எத்தனை
குருதிக் குளிப்புக்கும்
அவலக் குரலுக்கும்
காத்து நீ நிற்கின்றாய்...!?

www.padippakam.com



உனக்கு...
வேதனையில் விழுந்த – எம்
வார்த்தைகள் கொடுமையானதாய்...
இனிமையற்றதாய்... உணரவைக்கலாம்.

உந்தன் பேராதரவோடு
சிதைபட்ட உடலங்கள் – அவர்
விடை தெரியா மண்ணைமதில்
விடியலெனத் தேடுகின்ற
எந்தன்
தோழமையின் வெற்றுடல்.

சரி இனியென்ன
சிந்தனைக் கம்பமே...!?
அவ்வுடல்கள்
மண்ணிடையே வித்தாகி
விதைபட்டால்...

அதனை புழுக்கள் உண்டு
பசியாறி மகிழலாம்.

அல்லேல்... அவர்
ஆய்வுக் கூடத்தில்
மற்றோர் அறிவைப் பெருக்கும்
என்புக் கூடுமாகலாம் – அதை
உருவத்தால் மட்டும்
பெருத்தே தெரியும் – சில
மா மனிதர்களே கண்டு
மருண்டுபோகலாம்.

www.padippakam.com



அல்லேல்...

கனவாய்
நனவாய்
உயிராய்
உடலாய்
நடைப் பிணமாய்
சிந்தனையாய்
மனிதமாய்
சாம்பராய்... ஆகிடீன்...?

அடியிருந்து எழும்
அலை சுமந்து வருமம்
நுரை மீதிடையே...
கலமொன்று சமந்துனை(க்)
கலவென்று புக
கலந்திடு நீ...!
உலகெமதின் பெரும் பகுதியிலே.

www.padippakam.com

# அறிவித்தல்:
# "யாரும் இவ்விடத்தில் மண்வீடு கட்டாதீர்"

எனதாசை மண்வீடு
கரைந்து கிடக்கிறது
கடலலையுள்.

அந்தோ...
வெள்ளலை ஒன்றடித்து
அமைதியாய் ஆழத்தே போகிறது.

எனதாசை மண்வீடு
அதனொடு கரைந்து...

இந்த அலை
என்றுதான் ஓயுமோ...!?

என் முன்னால்
மணல் வீடமைத்த
எத்தனையோ வடிவங்களை
கரைத்துவிட்ட முண்டங்கள்
இங்கே நடை பயில...!



படிப்பகம்

www.padippakam.com



நான் மட்டும்
உடல் தொலைந்த
வெறுந்தரமாய்
கரைந்துபோன வீடெனதை...!!

எத்தனையோ கோட்டை
கொத்தளங்களைத் தின்று செமித்த
கடலலையுள் தேடுகின்றேன்.

இன்றெனக்கு
துடிக்கவேயில்லை எனதிதயம்.
நாடி நாள நரம்புகளும் செத்துப்போச்சு.

காரணங்கள் – நான்
தொலைத்த முண்டமெனும்
என் செயலால்.

எப்படி நானிதனை எழுதுதல்
எப்படி முடியும்...!?

கரங்களும் அதனுடன் சேர்ந்து
காணாமல் போனதே – இதில்
கோணிய வாயெனதால்
புலம்புதல் மட்டுமே கூடும்.

அப்படிக் கோணிய வாயெனதும்
கிழிபடுமாம்...!?
வடக்கும் கிழக்குமாய்
நாழிகை சிலதுள்.

இதனிடை
எனது அறிவுரையொன்று.

www.padippakam.com



"அலைமோதும் கரையோரம்
எவரும் கட்டாதீர் மண்வீடு...!"

முண்டமெனதை
கரங்களுடன் தொலைத்து
சீரழிந்தேன் நான்.

தரம் இழந்த உங்களிடம்
கரமிரண்டு உண்டதனால்...

அலை அரிக்காத
கரையோர எல்லைக்குள்
அறிவித்தற் பலகையொன்றை
அடித்தெழுதி நிறுத்துங்கள்.

அதில்
எச்சரிக்கை:
"யாரும் இவ்விடத்தில் மண்வீடு கட்டாதீர்"

படிப்பகம்

# நாய்மனம் அழுத கதை

எப்போதுமாய்
வேலைவெட்டி அற்று
நடையே புரியாது
ஓடித் திரியும்
நன்றிக்கென்றே ஒப்புவமை பெற்ற – சில
நாய்களை வேட்டையாடி
சற்று முன்பாகத்தான்
நகர்ந்து சென்றது
நாலுகால் வாகனமொன்று.

இனி என்ன நடக்கும் நாய்களுக்கு
தெருநாய்கள்தானே – அவைகளால்
இடைஞ்சல் அதிகம் – அதனால்
அவை அகற்றப்பட வேண்டியவைதான்.

எங்கள் தெருக்களில்
பிச்சைக்காரரோ அதிகம்
அவர்களால் இடைஞ்சலும் அதிகம் – அதனால்
அவர்களும் அகற்றப்பட வேண்டியவர்தான்.

எங்கள் மண்ணில்
அந்நியர்களோ அதிகம் – அவர்களின்
அபகரிப்புகளோ அதிகமதிகம் – ஆயினும்
அவர்கள் வெளிநாட்டு மாந்தர்கள்...!?
அவர்களை அகற்றினால்
உலகச் சட்டம்
எங்களைத் திட்டுமாம்...!!

www.padippakam.com



ஆகையால்...
எங்கள் நாடு
உலகிடை சுதந்திரமானது.
அந்தியரின் அனைத்து வியாபாரத்திற்கும் – எங்களாலே
இடைஞ்சல் அதிகம்... அவர்களுக்கு – ஆதலினால்
வாருங்கள்... எங்களை அவர்கள்
அகற்றி அழித்து ஒழிக்கட்டும்.

ஆக...
எங்கள் உலக அரசியல் முதல்
உள்ளூர் அரசியல் வரை
அமைதிப் பேச்சுக்கு மட்டுமே
சுற்றி வருவதாய் நம்புகிறோம்.
எவருமே...
அமைதியாக வாழ்வதற்கு அல்ல.

படிப்பகம்

# எம் குருதி பருகும் நீங்கள்...!

கணந்தோறும்
இங்கும் எங்கும்
குருதி கசிந்த
வியர்வை எமதை
சூடாக – குளிராக
உலகெலாம் சுவையாகப் பருகிடும்.

கஞ்சியோ கூழோ
நாம் மட்டும்
ஒருவேளை உணவுக்காய்
எங்களின் குருதியை
பிழிந்தெடுத்து விற்போம்.

வாடிச் சோர்வது – எங்கள்
உளமும் உடலும் மட்டுமே.
அந்த இரத்தம் விற்ற பணத்தில்



www.padippakam.com



தரகு பெரிதாய் நீக்கி
உணவு உண்போம்
மீண்டும் இரத்தம் ஊறிட.

நாடெமதின்
இதயமாய்
நாடியாய்
நாளமாய்
தேயிலையாய்த் தேனீராய்...

இரத்தமே ஊறிடு...!
மீண்டும் விற்பனையாகிடு...!!

முன்பொருநாள்
அடிமையாக்கித் தோணி ஏற்றி
நாட்டிய விதைகள் நாம்.

எங்கள் சம்மதமே அற்ற
ஒப்பந்தங்களின் கொள் முதலாக்கி – எம்
இரத்தமே எமக்கற்று
எவரெவர்க்கோ இன்சுவையாய்...!?

இப்படி...
உலகின் மூலைமுடுக்கெலாம் – எம்
வியர்வைக்கும்...!
குருதிக்கும்...!!
மதிப்போ பெரியது.

07.04.1993

www.padippakam.com

# தலையறுந்த சூர சம்ஹாரம்

வானத்துப் பேய் விரட்டும்
சீனத்து வாண வெடியில் – அந்த
இரா மூழ்கி ஒளிர்கிறது.

பிள்ளையார் கோயிலிலே – ஓர்
சூரன்போர் நடக்கிறது.

சில நூறுபேரோடு
நானும் – எனது
ஊராடும் நண்பர்களும்
பாய்வதுபோல நிற்கும்
மரக் குதிரகளை வருட

ஏய்... ஏயென்று எமை நோக்கி
யாரொருவர் உரம்ப...
ஓரமாய் விலகி
நாம் விரைந்து போக...

ஐயரது மந்திரமும்
ஆலாத்தியும் ஆலாபனையொடு
அரோகராக்கள் முழக்கமிட...

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில்
வாளொடு முன்தோன்றிய
ஆயுததாரிகளாய்
எதிரெதிரே அசுரனும் – முருகனும்
போர்க் கோலத்தில் நிற்க...

www.padippakam.com



தீவட்டிகளும் நெய்ச் சட்டிகளும்
நீ முந்தி நான் முந்தியென
திருவாடுதண்டேந்தி – சிலர்
அசுரனைப் பின்னணைத்த
முருகனின் ஆளைக் காவிக்கொண்டலைய...

பக்கமொன்றில் சிலர் தளர்ந்து
அசுரன் சிரச்சேதம் ஆகுமுன்பே
சூரனங்கு சரிந்துகொள்ள...!?

தீண்டுவார் தீண்ட
தீண்டாதார் பார்த்திருக்க – ஒரு
தீண்டான் தோள் கொடுத்தான்
நிமிர்ந்தது தாழ்ந்த பக்கம்...!!?
உடன்...
உருண்டது அவனின் தலை
மண்ணில் சரிந்தது தீண்டானுடல்.

இராம இராவண யுத்தமாய்
சூரனை முருகன் அழிக்கும் – ஒரு
சம்ஹாரம் நடக்கும்போது...

நானும் எனது நண்பர்களும்
வாண வெடி பார்த்து
மின்னலும் இடியுமாய்
கரும்புகை கண்களைக் கரிக்க...

விழுந்தன வெட்டுகள்
மண்ணில் புரண்டு
உருண்டன பலவுடல்...!?

www.padippakam.com



ஐயர் வந்தார்
அபத்தம் அபத்தம் என்றார் – அவர்
கை மணி கணன்றது
விழுந்தது கரமொன்று
அறுந்துதான் நிலமீதில்.

இரவின் இருளினில் – இருள்
கிழிக்கும் விளக்கொளியில்
பசும் புற்றரையெலாம்
கரும் சிவப்பளைய...

சூரன்போர்த் திருவிழா
அழுகையும் ஓலமுமாய்
ஆர்ப்பாட்ட வெறிகளுடன்
நீண்டுகொண்டே...

நிசங்களும்
நீதிகளும்
உரிமையும் அழிந்தழிந்து – அவர்
குரல்வளை நெரிபட
பெரும் சூரன்போர் நடக்கிறது.

இனிவரும் வருசமும்
இன்னுமோர் சம்ஹாரம்
நடந்திடல் ஆகுமோ...!?

!...அகின்
கடவுளர்காள்...! நீர்
வதம் செய்து கொலையாடி
பேதைப் பெண்களொடு உறவாடி – அவர்
பக்கத்துணை வேண்டுமென்று – பல

www.padippakam.com



பெண்களினை கக்கத்தில் வைத்திருக்கும்
சூக்குமந்தான் என்னவென்பேன்...!?

தீண்டாதான் வெட்டுண்டு வீழ்கையிலே
உந்தக் கந்தசாமியின் பெண்டாட்டி
திருமதி வள்ளி கந்தசாமியை
முதல் வெட்டிய பின்...

இடு காடலைந்து
மண்டை ஓடு திருடிவந்து
சுடு காடலைந்து
எரிந்தவற்றைப் பூசிக்கொண்டு
நேரகாலம் பாராது – என்றும்
யாசகமே யோசிக்கின்ற ஆண்டிக்கு – அவர்
துணைவிக்கு மேனியெலாம் அழுக்காடி – அதனால்
உதித்த ஊத்தைகளை விடவுமோ – அந்த
மனிதர்...!?

அவர் பெய்த மூத்திரமும்...
இன்ன பிற கழிவுகளும் – நீவீர்
அருந்தலாய்க் குடிக்கின்ற தண்ணீரில்
நிறைவாகக் கலந்திருக்கு.

அதனாலே இன்றுமுதல் – நீவீர்
நிலத்தின் நீரருந்தக் கூடாது.

இது நாள்வரை குடித்ததனை...
என்ன செய்ய...! என்ன செய்ய...!?

அதனால்...

www.padippakam.com



ஊத்தைகளை
குப்பைகளை
கிளறக் கிளற
நாற்றமே அதிகரிக்கும்.

வார்த்தைகளை
வளைத்துத் திரித்து
வேதங்களை
உதிர்த்துப் பிரித்து
மக்களை
மாக்களாக்கி அலைத்தரித்து
ஆபிரிக்க ஆற்றிடை
அலாதியாய் வாயகட்டி
வெய்யில் காய்கின்ற
முற்றிய முதலைகள் போல...!

உலகிலே வாயகட்டி
திமிரிலே காய்கின்ற
மதம்பிடித்தே அலையும்
அனைத்து மதங்களையும்

இத்தால்
உருச் சேதம் செய்வோம்.

படிப்பகம்

# எரிந்த வயிறுகள்...

ஊரடங்குச் சட்டமும்
ஊர் முழுக்க வெட்கமுமாய்
மூன்றாம் நாள் பின்னடையில்
வயிறின்று எரிந்து – எனை
கொல்கின்றது பசியால்.

முன்னொருபோதும்
யோசிக்கவே மறுக்கப்பட்ட
மிச்சாட்டரிசி உணவினை – இன்று
நானென் உடன் பிறப்புகளுக்கும் – என்
தாயைப் பெற்று
பெரிதுவந்த தாய்க்கும்
தருதல் மறந்து
கஞ்சிக்கு முந்திப்போனேன்.

இதை ஒருபோதும்
குடித்தறியா நாவெனது
உறைப்புச் சுவைதேடி
கிளி கொந்தி குறைபட்ட
காய் மிளகாய்க் காரத்தில்
குரையிடையே புரையேற...!

பகலினிலே மறக்குமிதை
கனவினிலே காண்கின்ற
சோமாலியும் நபீபியாவும்
மொஸாம்பிக்கும் சூடானும் – அந்த
ஆபிரிக்கக் கண்டத்தின்

www.padippakam.com



அரைப்பங்கிலும் அதிகமான
பசிக் கொடுமையின் கோரத்தை – எனது
வயிறின்று அறிகிறது... எரிகிறது.

அந்த என்புக் கூட்டு மனிதர்கள்
இந்தப் பகல்வேளை
மனதிடையே படங்காட்டிப் போக

அதன் மறைவில்
மிளகாயும் சுவையும்
கஞ்சியும் பசியும் வெறுக்க...!

அப்போதும்
பனஞ்சிராய் விறகினில் – எம்
வீட்டுத் தண்ணீர்
கொதித்துக் காய்கின்றது...

என்தாய் எனைப் பார்க்க
நான் அவளையே நோக்க...!!

மறு வேளை உணவுக்காய் – அவள்
தனக்குள்ளே எரிகின்றாள்.

(1985ஆம் ஆண்டின்போது பலநாட்கள் ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டு உணவும் மறுக்கப்பட்ட ஆரம்ப காலம்)

படிப்பகம்

www.padippakam.com

# ஆமைக் கோது மனிதன்

யுத்தம்..! முத்தம்..!!
முத்தம்..! யுத்தம்..!!
என்
முதல் முத்தத்தினை
இந்த
யுத்த முனையில்தான்
உமிழ்ந்து பார்த்தேன்!

அது
யுத்தத்திற்கும் சப்தத்திற்கும்
காற்றே புக மறுக்கும் – ஒரு
சிறு வெளியில் நடந்தவைதான்.

அவ் வேளை...
அன்புக்கும்
அமைதிக்கும்
காதலுக்கும்
சின்னமான – என்னிதயம்

இரத்தம் வடிதலை
பொறுக்காது
உடைந்தே போனது.

எனை உயிர்வாழ
கணப் பொழுதும் பிசகாது
குருதி குடித்துக் குடித்து
குமறிக் கொப்பழிப்பதில்
மகிழும் என்னிதயம்...!

www.padippakam.com



ஐம்பொறிகளையும்
கூடான ஓட்டினுள் அடக்கி
தன்னையே மறைக்கும் ஆமையாகி – அது
குற்றமுற்றதாய்க் கூனிக் குறுகி
தனக்குள் மண்டியிட்ட வேளையினை
என்னவென்பேன்.

யுத்தம் – அது
எனது உணர்ச்சியின் உறைவிடம்...!
முத்தம் – அது
எனது உணர்வின் உந்துகோல்...!!
பசி – அது
எனது உயிருடன் கலந்தது...!!!

அதற்காக...
கரமிரு உழைத்திடும்
பறந்திடும் பசியது...!

அல்லேல்...
அடிமுடி மாற்றி
குடிமனை அழித்து
புதரிலே படுத்து
ஆரம்ப இடத்திற்கே மீண்டுசென்று
எங்களை நாமே
அடித்துப் புசித்த

மிருகங்கள்போல கலவிகள் புரிந்து
பிறப்பதைப் புசித்து – பின்பாய்
மனிதம் வளர்ப்போம்.
அதற்கென அதுவரை
ஆயுதம் விளைத்த

www.padippakam.com



ஆட்டுத்தோல் போர்த்திய
ஓநாய்களாக
யுத்தங்கள்மீது
முத்தங்கள் பதிப்போம்.

மாறாக...

நிதமும்
அமைதியின் மேனியில்
முத்தங்கள் பதித்திட
யுத்தங்கள் வெறுக்கும்
இதய சிந்தனையில்
முத்தங்கள் பதிப்போம்...

படிப்பகம்

www.padippakam.com

# குளிர் செரித்த மண்ணில்...

நிம்மதித் தூக்கம்
எனை அழைக்கின்ற
மிகச் சில இரவுகளிலும்...
எனதிரவைத் தமதென்று
முகம் மறைத்த எவரோ சிலர்
வந்து வந்து போகின்றனர்...!?

வெள்ளை உடையணிந்து
தரம் அறுந்து தொங்கி
குருதி புரண்டோடும்
வெண்புறாவைக் கையேந்தி...

வா... வா...
வெளியே வா...

உனக்கு இது Last warning...!!!

நீ வரும்போது
உன் தலையை எடுத்து வா...!?
உன் மண்டை சிதறவேண்டும்...!!?
எங்கள் தலைமையிட்ட
உத்தரவு என்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com



வருவோர் இப்படி வருவதிலே
எந்தன் இராத் தூக்கம்
தொலைந்தே அழிந்து – அந்த
இரணங்களை இருட் குறிப்பில்
சிவந்து சிந்தும்
சிலவரிக் கோடுகளாய்...

இப்படி...

வடிந்து சிந்தும்
தினக் குறிப்பின் நிலை எனதை
நீ பார்க்க விருப்பம்தான்.

இருந்தும்...
இராத்தூக்கம் உன்னிடையே
இறந்துபோகும் என்றெண்ணி
வேண்டாம் அவைபற்றியொரு சொல்...

அந்த எரிந்து இரவுகளை
செய்தியாய்...
சிந்தனையாய்...
கனவாய்...
கவியாய்...
என்னிடை ஒழித்துவைத்தேன்.

இருளொளி வெளியாய் மட்டும்
தெரியுமிந்த தொலை பொழுதில்
உனக்கு அவை வேண்டாம்...
வேண்டவே வேண்டாம்.

www.padippakam.com

# என்(ன) வாழ்விது

என்ன சந்தோசந்தானே
அகதி வாழ்வு...!?

ஒருநாள் பொழுதில்
ஆயிரக்கணக்கான
கிலோமீற்றர் தூரத்தை
அளந்தறியத் துடிக்கும்
வல்லூறுப் பறவைபோல்

உயரவும் நீளவுமாய்...
மேற்கும் கிழக்குமாய்...
வடக்கும் தெற்குமாய்...
பறந்து கடந்து

ஆவலுடன்...
பரிதாபத்துடன்...
பிச்சைக்காரத் தனமான
அங்கலாய்ப்புடன்...

எதிர்பார்த்த அகதி வாழ்வு
மகிழ்ச்சிதானே...?

எங்களின் வாழ்வில்
மகிழ்வென்பதே அந்நியமாகிட
முழுமையற்ற அறைகுறையில்
சொந்த மண்ணையும்
குடும்ப உறவையும்

www.padippakam.com



விட்டுப் பிரிந்து
ஏதிலியர் என்கிற நாமத்துடன்
அந்நிய மண்ணில் அமைந்த
அகதி வாழ்வில்
எப்படி மகிழ்வை
சுகிக்க இயலும்...?

இப்படி நாமான
பின்புலமும் முன்புலமும்
எப்படியானதென்ற உண்மையினை...!
அவை...
எப்படியாகுமென்ற எதிர்வுகளை...!!

நாம்
நேர்த்தியுடன் மனந்திறந்து
சொல்லியே ஆகவேண்டும்.

அல்லேல்...
எங்களின் எதிர்கால நிலைகள்
பொய்களில் வாழ்ந்து
தங்களை உருமாற்றிப்போகும்.

அவை மட்டுமா...!?
எம் மண்ணின் சோகம்
பொருளுக்காய் மட்டும்
எமை எதிர்பார்த்துப் பின்பு
கறி வேப்பிலையாய்த் துப்பும்.

அதனால்...
எங்கள் அகதி வாழ்வின்
அவலங்களை
அப்படியே சொல்லுங்கள்.

படிப்பகம்

www.padippakam.com



ஆடம்பரங்கள் காட்டி
யுத்தங்கள் மூட்டி
சாதியைப் பிடித்து
கோயில்கள் கட்டி
திருமணத்திலாவது கோத்திரமறிந்து
வேற்று இன மனிதரை மட்டும்
ஏற்கின்ற ஆதித் தமிழராய்
எங்களில் பலயேர்
மகிழ்வுடன் வாழ்கின்றோம் என்பதை.

படிப்பகம்

# நனவெரிந்த சாம்பலில்..!

இன்று விடிந்ததாய்த் தெரிந்ததே
இதுவும் காலைதான்.
இன்று போலவே அன்றும்
காலை சுயமாக விடிந்தது.

பள்ளிக்கூடமும் அடக்கமும்
ரியூசனும் படமும்
வீடும் கட்டுப்பாடும்
சமூகமும் கட்டாக்காலியுமாய்
அன்றைய நாட்கள்
மதியத்துள் மாண்டபோதும்...!

நட்புகள் இருவராய்
சைக்கிளில் வருகையில்
எமைப் பொலீசு கலைத்து
திருக்கைவாலால் அடித்து...!?
எமை அடக்க முனைந்தபோதும்...

எமக்கே உரிய
சுதந்திர மிடுக்குடன்
நாமலைந்த காலங்களும்
நனவெரித்துப் போனதோ...!

இப்படிக் காலைகள்
விடிந்து விடிந்து
நானும் அதனுடன்
எழுந்து மடிந்து...
அத்தனை காலங்களும் போனதோ...!!

www.padippakam.com



இப்படித்தான்
இன்றைய காலையும்
சுயமாக
விடிந்தது போலத் தெரிந்தது.

இதற்குள்
எமது மரணமும்
ஒரு முறைதான் நடக்கும்
மறு முறை அற்று
அந்தக் காலையும்
என்றும் போல....
கரைந்து வடிந்து
எந்தனின் நனவெரித்துப் போகுனெனின்....!?

தொடுவான் கரையெழுந்து
படுவான் கரை நோக்கும்
செங்குருதி காய்ந்து – அதன்
செழுமையே போகுமுன்...
எம் குருதி பாய்ச்சி – இனி
எழுந்திடும் காலைகள்.

இக் காலையும் சிவப்பாகி
பகல்களும்
இராக்களும்
என்றாகிப் பிரியாது
சிறப்பான வாழ்வுக்காய்
கனவெரித்து
புதிதாக விடியட்டும்.

www.padippakam.com

# கல்லிடை சொல்லி ஆறும்

எங்கெலாம் அலைந்து திரிந்து
மனக் குமுறல் எந்தனதை
உந்தனிடம் சொல்லி
மனதாற்றும் நிம்மதியில்
பெரு மூச்சை – நான்
வெளி எறியும் போது

நீ...!
அதைக் காவிச் சிலாகித்து – ஒரு
மலையின் முகடாக்கி – அதை
தகர்த்துக் கட்டிடமாக மாற்றி...!?

ஆராரோவுக்கெலாம் விற்று வாங்கி – அதை
பெரு முதலாய் ஈட்டிய...
நிம்மதி உனக்கு.
இனி
என் செயல் என்ன?

வாழ்நிலை எமது
இப்படியாய்
மதமும், கடவுள் என்ற பயமும்
அவையற்ற
நாய் மலசலம் கழிந்த
கல்லாயிருந்தாலும்...!!

அது ஒன்று வேண்டும்
உடனடியாய் இவ்விடத்தில்.

படிப்பகம்

www.padippakam.com



நீ...!
கதை புனைந்தனையால்
குமுறும் என் மனதில் நின்று
எனையெரிக்கும் தீப் பந்தை
அக் கல்லின்மீது
குத்தி உடைத்து
சுமை எனதாற

அதற்காய்...
நாய் மலசலம் கழிந்த
கல்லொன்று வேண்டும்.

படிப்பகம்

# வளர் பிறை

எங்கள் மண்ணின்
மணமறியாப் புலத்தில்
பிறப்பறிந்த – என்
இனக் குஞ்சான என்னவன்
எதேச்சையாய்...!
இருக்கமுடியாது...

சிந்தனை பெருக்கும்
வளர்பிறை வயதவன் என்பதால்
சிந்தித்தே கேட்டுடைத்தான்.

நீங்கள் எப்போதுதான் சாவீர்கள்...!?

என்ன...?

நீங்கள் செத்தால்
நான்தானே அப்பா இவ்வீட்டில்.

நிறுத்தடா நாயே... என்று
நினைந்தது மனமெனினும்
சொல்லிட நாதியற்று
சுருண்டது நாக் கொழுந்து.

நீ...!
உலகெனும் பள்ளிசென்று
படித்து உண்டு வளர்.

www.padippakam.com



மீண்டும்...

புலம் பெயர்ந்து
மண்ணெங்கள் மணம் முகர்ந்து
உன்னையே நானாக
அதிலும் மேலாக
ஆக்கிவைப்பேன் என்னவனே

அப்போதும்
எப்போதும்
அப்பாவாய் இணையிருப்பேன்
உன்னருகில் தான் என்னவனே.

எந்தன் மனவூற்றை
வாய் தானே சொல்லியது.

படிப்பகம்

www.padippakam.com

# சுமைகாவும் சிறுதும்பி

முன்னொருபோது – அவன்
சின்னவனாயிருந்தான்.

நான் அப்போது...
சந்தியில் நின்று
கதையளக்கும் காலம்.

என்போன்றவரொடு நின்றவாறே
இவனையும் பார்க்கிறேன்.
அன்று என்மனமும்
இவன்போல சின்னவனாக...
சின்னவனாக...

வளைந்து நெளிந்து
நெடுத்தே போகும் – நடை
பாதையின் இடையில்
மேற்கு நோக்கி
பனம்மூரிப் படைகொண்ட
ஒழுங்கை வேலி
ஆங்கே இடைமறிக்கும்.

பூவரசும் கிளிசறியாவும்
நாராணியும் கிழுவையும்
சேர்ந்தங்கு நிழல் பெருக்க...
ஆமணக்கும்
பன்னை பாவட்டையும்
நெருஞ்சியுடன்
சம்புப் புல்லு பரந்திருக்க

www.padippakam.com



வண்ணத்துப் பூச்சிகளும்
இன்னபிற தும்பிகளும்
இங்கிருந்து அங்கு போய்
அங்கிருந்து இங்கு வர...

இவனும்
இன்னும் சில இளவட்டுக்களும்

தையல் நூலோடும்
தார்வாழை நாரோடும்
அறுத்தெடுத்த கோரைப் புல்லோடு...!

பூனைபோல் பதுங்கி – பெரும்
புளுகமாய் பிடிப்பர் தும்பி – அதன்
உடல் பிதுங்க தடம் போட்டு...
பின்னுடலில் புல்லிறுக்கி...
மேலேகு என்றான பணிப்புக்குள்...!?

அதுகேட்டுப் பற்பதுபோல்
சிறு தூரம் மேலெழுந்து
வதைப் பாரம் தாங்காது
உயிர் போக்கும் நிலையாலே – அவை
தலைகீழாய் நிலம் நோக்க..!

இவர் இளவட்டம்...
தும்பியினம் துடிதுடித்து
உயிர் துறத்தல் இவர்க்கென்ன...!?

தும்பி பிடித்துத்தான் ஆகவேண்டும் – அவை
உடலற நடித்துத்தான் ஆகவேண்டும்...!!

www.padippakam.com



என்றான வேளையதில்
வந்தமர்ந்தார்
தும்பியரும் வேலியிலே

வேளையதில் வந்தமர்ந்தார்
தும்பியரும் வேலியிலே

தடல் புடலாய்
ஓர் சிறுவன்
பூனையாய்ப் பதுங்கி – அந்த
காவலரண் வேலியிலே
தாவி மெல்ல ஏறியதில்....

பொறுமையற்ற வேலியது – தன்
கட்டிழந்து... படையழிந்து...
பொலு பொலுத்துச் சரிகிறது...

பொறுமையற்ற வேலியைப்போல்
மனதெனதுள் உயிர்துடிக்கும் தும்பியினம்
வதைபட்டுச் சாகயிலே – என்
பெரு நெஞ்சத் துடிப்புக்குள்
சிறுதும்பி அவையாகி – நான்
வதைநிலைகள் வெறுத்துப்போனேன்.

# ஊரும் உறவும் நித்திய மரணமாய்...

நண்ப...!
நீ உனது
கிராமத்து மண்வாசனைபற்றியும்
நான் எனது
கிராமத்து மண்வாசனைபற்றியும்
நீ உனது
நகரத்து வாழ்வுபற்றியும்
நான் எனது
நகரத்து வாழ்வுபற்றியும்
சேர்ந்திருந்து கதை பகர்ந்தோம்.

நீ உன் காதலைப் பற்றி
கதைத்தபோதெல்லாம்
நானும் என் காதல் பற்றி
கதைத்து மகிழ்ந்திருந்தோம்

நீ உன் மதம்பற்றி கதைத்தபோது
நானும் அவைபற்றித்தானே
ஆழமாய்க் கருத்துச் சொன்னேன்.

நீ மரணிப்பைப்பற்றிக் கதைக்கும்போது - அதில்
எனக்கு மறுகருத்து இருந்ததில்லையே

காதலும் - மதமும் - மரணமும்பற்றி
பேசும் போதெல்லாம் - கருத்தில்
மாற்றம் காணாத எங்களுக்குள்...!

திடீரென்ற கருத்தியல்
தாக்கியதெப்படி...!?

www.padippakam.com



முரணென்ற ஏதோ வந்தபோது
உனக்குச் சிலரும்
எனக்கும் சிலருமாக...

கூடிக் குழுக்கட்டி
நிசப்தம் குலைத்து
புத்திகள் பகர்ந்து
காதல் – மதம் – மரணம் பற்றிய
கருத்தில் பேதமில்லாத எங்களை...

காலத்தால் முடிவற்ற யுத்தமாய்
வாழ்வெமதை ஆக்கிவைத்து...!?

உன் கிராமமும்
என் கிராமமும்
ஓர் கிராமமாய்
காண்கின்ற நிலையும்...

உன் காதலும்
என் காதலும் நிசமானதாய்
மாறும் நிலையும்...

உன் மரணமும்
என் மரணமும்
உன் மதமும்
என் மதமும் – ஒரு
மனதாய் மரணம் தாண்டி...

கற்பனை மாண்டு
கருத்தில் பேதமாய்

செயலிலே கோரமாய்...
முடிவற்ற யுத்தமாய்...
நித்திய மரணமாய்...
!...ஆனது எப்படி...?

# போரடிக்கும் அறுவடையால்

விரைவாய் நடந்து
வேகமாய் ஓடி
உடலுனைப் பிழிந்து
மனதினை வருத்தி – இந்த
சமரசம் பேசும் சமூகத்திற்கு
காத்திரமாயிரு.

அகதியாயுனை ஏற்றதற்காய்
இந்தச் சமூகத்தோடு
கரைந்துபோ...
மணமுடி...

அதுவரை...!
காந்தர்வங்கொண்டு – உன்
உதிரத்தை வியர்வையாய்ச் சிந்தி
புல் மண்டிக் கிடக்கும்
மண்ணிதனை உழுது, மறுத்து
உதிரமுனதை உரமேயாக்கு.

அப் பெறுமதி மிகுந்த
அறுவடை முடியுமுன்
வைக்கோற் பட்டடையாய் – உனை
மாற்றிவிடும் சமூகமிது.

இடை இதற்குள்
உனை மகிழ்த்தி
உணர்வற்ற உடலாய்விடு.

# ஏற்பு...

நீள் நெருப்பாய்...
நெடு நீராய்...
மலைக் கல்லாய்...
இதனிடை மண்ணாய்...

தெரிகின்ற பூமியில்
எல்லாத் தாதுக்களும்
அணுவாய் விளைந்திட

அதில்...?

உயிர்களைப் பொரித்து
உருண்டு திரியும்
இந்தக் கோளம்மீதுதான்
எல்லாப் பூக்களும்
அவைதரும் கொடியும்
செடியும் மரமும்
சுயமாய் சிரித்துச் சிலிர்க்க...!

அதிலே கிளர்ந்த
கணுக்களும் கிளையும்
கோடரிப் பிடரியுள் ஏற...!!

அந்த
உருவைத் தந்த மரமே
தனது
வேரறுக்கும் கோடரிக்காம்பாய்...

www.padippakam.com



வெறுப்பின் உச்சியில் – அதன்
பொறுப்பின் மூலமே பூமி – ஆயினும்
கணுக்கணுவாய் அணுவை உடைத்து – எமை
அழிக்கும் கருவிகளை
விளைந்து கொடுக்கும்
பூமி எங்களதை
வெறுக்கோம் நாம்.

படிப்பகம்

www.padippakam.com

# விடியா இரவுகள்

**வி**டியா இரவில் விழித்தெழுந்து
புரியா மொழியில் குறியெழுதி
என்றோ தனைத் தொலைத்த
உடலொடு உறவாடி
அருவச் சிசுவுக்கு
பெயரும் சூட்டி...!

கரித்துப் பொரித்து
கெட்டிச் சிந்தி
உண்டு கெட்டு
பரதேசியாய்ப் போனோரில்
நீ
நான் என...

எழு புலமிருந்து
தொடு புலம் வரையும்...

ஏதேதோ...!?
புரியா மொழியில் குறி எழுதும்
எம்மினப் பரம்பல்...

இவையெலாம் புரிவதற்குள்
பலமுறை செத்துச் செத்தே
மீண்டும் மீண்டும் பெயர்ந்திருக்கும்
புலம் பலவிட்டு....
இது
எங்களின் காலம்.

www.padippakam.com



அப்போதும்...

அந்த நிலாச் சுடும்
பகல் கரியாய்ச் சொரியும்
இவை இட்ட அல்ல
ஈன்று போட்ட
கோள்களும் தாரகைகளும்
உப்புத் தின்ற பாக்கு நீரிணையும்
பனை முனை சொல்லும்
மாங்கனி நாடும்...!

!...என்றும் போலவே
என்றென்றும் வாழும் – அதில்
அவ்வப்போது
காலினை வருத்தி
மேனி நொந்து மறையும்
பித்த வெடிப்புக் கீலங்கள் போன்ற
ஏதேதோ
புதுப் புது அர்த்தங்கள் சுமந்து.

படிப்பகம்

www.padippakam.com

# எழுதுதல் வேண்டும்..?

எழுதுதல் வேண்டும்
ஏதாவது எழுதுதல் வேண்டும்
எதை எழுதி
எவர் மனதைக் குழப்பவென
புலம் பெயர்ந்து
வந்தமர்ந்த புலத்தில்
ஏதாவது எழுதுதல் வேண்டும்....!?

அதற்காக... ஏதாவது
எப்படி ஏதாவது
தொலை நோக்கற்ற ஏதாவது
ஏதாவது வில்லண்டமாய்
விதண்டாவாதமாய்...

வேண்டாம் நிறுத்து!
என்கிறது என் மனம்.

இதனாலேயே ஏதாவது
என்றாவது...! எங்காவது...!!
எழுதுதல் வேண்டாமென
எழுதுதல் வேண்டும்.

இனி எழும் காலத்திற்காய்.



படிப்பகம்

www.padippakam.com

# இரந்து இரந்தார்க்கு ஈயும்

பகலனைப் பார்ப்பதிலும்
நிலவனை இரசிப்பதிலேயே
சந்தோசம் எனக்கும்
அப்படியே அமையலாம் உனக்கும்.

இந்தப் பகலன்
தனையோர் சர்வாதிகாரியாக
எவரையும் தன்னிடம் நெருங்காது – அது
தன் இச்சையில் எரிந்தலைய...!?



தங்கம் வெள்ளி உலோகங்கள்...
மண்ணொடு மண்ணாய்
மிதிபடும் போது – அதன்
ஒலிப்பும் மதிப்பும் தெரியாதது தான்.

மண்ணிடை பிரித்தெடுத்த உலோகத்தை
உருக்கித் தட்டி
உருட்டி வளைத்து
அணிகலனாக்கி அணியும்போது...!



படிப்பகம்

www.padippakam.com



அழகோ அழகு – என்
அழகு நிலவனைப் போல.

நிலவனும் சுயமாய் மிளிர்வதில்லையே...
பகலன் தன்கதிர் தரமறுத்தால்.

இப்படியே...
காலம் தானே உருண்டோடினாலும்
சக்கரத்தின் உதவி வண்டிக்கும்
இறக்கைகளின் உதவி பறவைக்கும்
எனது உதவி உனக்கும்
உனது உதவி எனக்குமாய்...

ஒன்றோடொன்று பின்னப்பட்டு – ஓர்
அடம்பன் கொடிப் பின்னலாய் – ஓர்
தூக்கணாம் குருவியின் கூடாய் – அந்த
நிலவனுக்கு ஒப்ப
சமூகம் சிக்குண்டு
மிளிர்ந்தும் கிடக்கிறது.

இந்தச் சமூகத்துள் தான்
சிந்தனைகள் இணைந்து கருக்கட்டி
அறிவைப் பிறந்தும் கிடக்கிறது.

நாம் புதுமையாய்
எதையேனும் கண்டுபிடிக்க
அது புதுமையாய்த் தெரிகிறது.

அதனை நாம்
கண்டுபிடிப்பதற்கு முன்பதாகவே.

www.padippakam.com



அது இம் மண்ணில்
எம் முன்னால்
வேறு உருவில்
வாழ்கிறது என்பதே புதுமை.

இப்படித்தான்...
பகலனும் இரவனும்
இன்னும் பலவும்
கடவுளர்களாக தெரிந்தார்கள்.

இரவனெனும் சந்திரனில்
மனிதப்பாதம் பதிந்த பின்பும்
பகலெனும் சூரியன் – ஓர்
மாபெரும் சர்வாதிகாரியாய்
தீ பரப்பிக் கிடக்கிறது – என
தெரிந்த பின்பும்
அந்த ஜடங்களை – நாம்
கடவுளராக மண்டியிடுவதில்தான்
சந்தேகங்கள் முளைக்கின்றது
எங்களின் நவகாலச் சிந்தனை...!?
அறிவியல் பற்றி...!!?

படிப்பகம்

# பனி புணர்த்த நீங்கள்...!

சீற்றம் கொண்ட
இயற்கையில் வாழ்ந்த
ஆதி மனிதர்
அதற்குப் பயந்து
ஒதுங்கி அழிந்தபோது...

அவற்றின் சீற்றம்
அவர்களை முன் நடத்த – அதனை
ஏதேதோ மாபெரும் மிருகமாய் நோக்கி...

தங்களின் மேனியை
கடித்துக் குதறும் விலங்கினை
போர் பாச்சி அழிக்கின்ற
அம்புவில்லு கல்லு பொல்லு – என
இன்னபிற காலமதன் கருவிகளை
குழுத் தலைவர் சண்டியர் மன்னரென
மல்லுக்கட்டி வெற்றிகண்டு
மடிந்த மனிதரினை

கடவுளெனும் உருக்களாக்கி
பகுத்த உளவியல் நிலையில்
அஞ்ஞானச் சாமியர்
இயற்கை வதைகளை நிறுத்த...!?

அன்று அவர்கள் கண்ட
அக்கால நவீனமே
கடவுளென்ற மாயை...!

www.padippakam.com



அதற்காக...

உயிர்களை வதைத்து – அதனை
மனிதரில் திணித்து – தினமும்
வரிகளையும் பலிகளையும்
விதியென்ற சட்டங்களாய் வடித்து
கட்டிய உண்டிச்சாலைகளே
இந்தப் பாரிய கோயில்கள்.

அதனால்...
புசித்துக் கொழுத்த
மதங்களைப் போல்...

இன்றுமதற்கு தீனியாகும்
மனிதரைப் போல்...

மாறுதலை ஏற்காது
ஆதி மரபு பேணி
உங்களை நீங்களே
முளைத்துக் கொண்டு.

பனியொடு புணரமட்டும்
உங்களைத் துகிலுரியும் மரங்களே...!

வெப்பக் குஞ்சு – தன்
சுடு கதிரைக் கொஞ்சம்
முடுக்கிடும் வெளிகண்டு
ஏனோ நீவிர்
போர்த்துவீர் இலைகளை
உடைகளாய் உம்மீது.

www.padippakam.com



பழமையுள் நீர்
மாண்டு, மாண்டு
அச்சம்
மடம்
நாணம்
பயிர்ப்பு என்பனவெல்லாம்
வெப்பக் குஞ்சிதைக் கண்டுதான்
வருகிறதோ உங்களுக்கு...!?

அப்படியானால்...
உங்களுக்காகவும் – தன்
விலா எலும்புடைத்து
தந்தவன் எவனோ...?

# நிலவுண்ட நெத்தலிச் சொதி...!

அதோ...!
அந்த நிலவு பெய்த
வயல் வெளியில்
மணல் கொழித்து
விதை புதைத்து
இன்றதற்கு அறுவடை நாள்.

இது நாள்வரையும்
யாராலும் கதியால் நாட்டி
எல்லை போட்டு
அரக்கி நட்டு இடர்படாத – இந்த
அண்ட வெளி யாருடையதோ...!

இது எவரேனும் முதிசமோ...!!
அப்படியாயின்...
அவருடன் பங்கு எனது பற்றி
எல்லை பற்றி
நான் பேச வேண்டும்.

நெத்தலிச் சொதி விட்டு
சிக்கெடுத்து
இந்த வெளியூடே
எம் வயல் வெளிநிரம்பி
அடி நிலங்கள்
கசிந்தோடும் நிலவது
எனதினிய இரத்த உறவு
மாமன் எனக் காட்டி
இடியப்பம் தீத்தி...

www.padippakam.com



!...எனக்கும் அவருக்கும் திணித்த - எனது
அம்மாவின் சுட்டு விரல்கூட - என்
நினைவிடையில் நின்றிருக்க.

வட புலத்து
இருளிடையில்
நீண்ட காலம்
மாமன் என்னவரை
காணவில்லையாமே...!?

அவர் புதைந்த
அண்ட வெளிப் புதருக்கு
சொந்தக் காரர்
யார் யாரோ...!?
அது நீங்களாயின்...

பங்கு எனது பற்றி
எல்லை பற்றிப் பேசல் வேண்டும்.

படிப்பகம்

# இறும்பூதல்..!

செவ்வாய்க் கோளத்தில்
எவருமே இதுவரை
பறக்க விடாதிருந்த
அரைஞாண் துண்டொன்று
தொங்கிக்கொண்டது!

வேவுப் படைகளும்
காவற் படைகளும் – அங்கு
ஆள் நடமாட்டம் உண்டோவென
குத்துமதிப்பாய்ச் சேதி கூற..!

இதுவரை அங்கே
மனித உயிர்களே
இல்லையென்ற தகவல்.

ஆனாலும்...

ஆபத்தானதும்..!
அறிவார்த்தமானதும்..!!
வரலாற்றை கொண்டதுமான..!!!
ஏதோ வகைப் பிராணிகள் – தாமே
சுய நகர்வுகொள்வதாக
ஆணித்தரம்.

www.padippakam.com



யாழிருந்து
வேவு காவற்படைகள்
தலை கால் புரியாத
கொழும்புத் தலைமைக்கு...

அனுப்பி உரைத்த
சேதிகளில் இவை
தடித்த எழுத்தினதாய்.

❀

படிப்பகம்

www.padippakam.com

# உடைக்க முடியாப் பூட்டு

இறுக்கு இறுக்கு
அரையிற் கட்டி
பாதுகாப்பாய் இறுக்கு
ஆலயம் – அரங்கேற்றம்
நீராட்டு – பிறந்ததினம்
கச்சேரி – கலைவிழாக்கள்
கல்யாணம் – சின்னமேளமென
இன்னும் எத்தனை எத்தனையோ – உன்
சொத்தைச் சுமந்துகொண்டு...

கையிலும் காலிலும்
கழுத்திலும் காதிலும்
கண்ணிலும் மூக்கிலும்
இடையினிடையிலும்
எங்கெங்கோ அங்கெல்லாம்
தொங்கவிட்டு...
கட்டுக் கட்டாய்
அடுக்கிச் சுமந்து...

சிகரம் போல – ஒரு
சப்பறம் போல அசை
அசைந்து சும
சுமந்து நட
நடந்து நடமாடும் நகைக்கடையாகு – ஆகி



www.padippakam.com



மற்றவர் மனதைத் தூண்டு – அதை
பார்ப்பவர் பார்வையை
அப்படியே நிறுத்து – நிறுத்தி
கண்களை உறுத்து – அவர்
மனங்களை பொறாமையில் இருத்து
நிறையவே உன்னிடம் இருந்தால்.

இல்லையேல்..!
கடன்பட்டாவது அல்லேல்
இரவல் கொண்டாவது நடு

நடுநிசியில்
ஆயிரம் லைற்றுப் பூட்டி
அட்டகாசமாய்
ஊர் வளைந்து வரும் – ஒரு
சப்பறம் போல மலைக்க வை – வைத்து
சிகரம் போல சிங்காரமாய் நில் – நின்று
மற்றவர் மனதைக் கெடுத்து – உன்னில்
கொள்ளை கொள்ளவைத்து – நீ
கொண்டதை அவர் அறுத்து – அவரை
கொள்ளையர்களாக்கு.

இவற்றை நீ...!
சுமந்து நடவாது விடின்
சமூகமோ உன்னை
வெறுத்து ஒதுக்கிடும்...
ஐயகோ..! ஐயகோ..!!

நாளை உனை
மனுசமென சொல்லவே மறுப்பர்
தலை உனதுள்
கருத்துண்ட மூளை உண்டா?
சுட்ட செங்கல் கட்டியோ அது
என்பது பற்றியோ...?
உயிர்களை மதிக்கும் மனிதம்

www.padippakam.com



உன்னுள் வசிக்கிறதா
என்பது பற்றியோ
கேள்விகள்...!!?
இந்தச் சமூகத்திற்கு
தேவையில்லை.

உன் மூளை தனையெடுத்து
உப்பும் கொச்சிக்காயும்
போட்டதனைச் சுண்டி...

நகையாய்ப் பணமாய்...
அடுக்கு... அடுக்கு... அடுக்கி
மூடு... மூடி அடுக்கு.

உயிர் - மனிதம்
இனம் - நாடு - உலகு
இவையெலாம் பற்றிய
சிந்தனை...!?
அவை தேவையும் இல்லை.

உனக்கு அடுக்கு - அடுக்கி
அதோடு உனதுவழி தொடர
ஐந்து - பத்து
குஞ்சுகளாய்ப் பொரி
அதனையும் முடிந்தால்
வெறும் முட்டைகளாயிட்டு - அடுக்கு
அடுக்கி அடைகார்.

கவனம்..!
அவை எனக்கு
என்னவோ செய்யுது
என்னை வெளியே விட்டு - உன்னை
உள்ளே வைத்துப் பூட்டு - அதற்கு
நீ போட்டுப்பார் எவராலும்
உடைக்க முடியாப் பூட்டு.

www.padippakam.com

# கல்லில் நாருரித்த தலை...

கைகளால் பின்னி முடிந்த
அங்கிகள் சில
என்முன்னே
அழகுடன் காட்சியாகின.

சிறிதும் பெரிதும்
குறுகலும் நெடுதலுமான
அங்கிகளவை.

பின்னலில் பிழையோ..!
பின்னும்போது பாராமுகமாய் – அல்லது
புரியாது விடுபட்ட தவறுதலோ...

அவைதனில்
பொத்தல்கள் – பொள்ளல்கள்
பல வகையாய் தோன்றினவே

உலகத்தில் நாடுகள்
நாடொன்றில் நகரங்கள்
நகரத்தில் கிராமங்கள்
கிராமத்தில் சமூகங்கள்
சமூகத்துள் நானும்
நீவீரும் ஒருவராய்...
க(ா)ட்சிகளாயினோம்
ஒப்ப இவைக்கு.

அழகாக...

www.padippakam.com



அதற்கும் மேலான
அதீத அழகாக
தெரிந்த அவை
அதிசயம் அற்புதம்
அவை இப்படியாக...

தரம்தனை நிலம் நோக்கி
நெகிழ்ந்து நெழிந்தொருவர்
சலவாசலால் மலங்கழிந்து
கரமூன்றி நகர்ந்து சென்றார்.

காலம் பசியெடுக்க
நெஞ்சமவர் எங்கெங்கோ
அலைந்து வந்து
வல்லுவம்போல் தெரிந்த காதுள்
முகவாய் வளைந்து சென்று
குடுமியைக் காறாப்பித்து
கக்கிவைத்தது.

முண்ணாணும் மூளையும்
இட நடு வலம் புரியாமல்
அதைச் சுவைத்துச் செமித்து
பல்கிப் பெருக்கி
புதிதாய் ஒன்றை
திரித்துப் பின்பு
ஒன்பதாக்கி
மீண்டும் மலங்கழிந்தது.

மரங்களும்
செடி கொடி புல் பூண்டுகளும்
தளிர் தமதை

www.padippakam.com



நிலம் புதைத்து
வேர்களினை முகிலிடை சென்று
அந்த
அண்ட ஆகாய வெளியுள்
நீரருந்திக்கொள்ள
எனதுடலில்
வியர்வைபோல் ஏதேதோ
பிசுபிசுத்து நாற்றமடித்தது.

வெட்கத்தால் குறுகிய மனசும்
உடலும் உள்ளமும் கூசி
உயிர் சிலிர்த்து – ஓர்
கருக்கிய மரத்தைப்போல் – என்
உடலை வெளி போர்த்தி நிற்க

பழம் புசித்து
பழுத்த பாம்பொன்று
விரல்களினால் அபினயித்து
அழகாய் நடனங்களாடி
ஆதாம் ஏவாளை
நாடிச் சென்றது.

ஒரு கணம்
திகைத்து பின் – நான்
சுதாகரித்து எழுந்து – என்
நிச நிலைபுரிந்து பயந்து...
..... ..... ..... ..... ..... .....

மலைக் கல்லது
நிறுதிட்டமாக
அழுது சிவந்து
அசைவின்றி நின்றது.

www.padippakam.com



தலை எனதோ
பாய்ந்து பாய்ந்து
அதனில் மோதி மோதி
கல் நார் உரித்துச் சோர்ந்தது.

நீ...!
எழுத்தாணியாகி
ஏடேந்திப் படியென்று
அவை ஈந்த
வைரப்பனையொன்று
எனதருகே
தமை முறித்துக் கிடந்தது.
படியென்று
ஓலையினைச் சுவடிகளாய்
எமக்கு ஈந்த பனை – தான்
எப்போது படித்ததென்ற
வரலாறு சொல்லாமல்.

# ஒரு முரண்பாடுக்கு மீசை அரும்பிய காலம்...!

சிந்தனை முளையெடுத்த – எந்தன்
மூதாதையரில் ஒருவர்
தன்னந்தனியனாய் வாழ்ந்தபோது – அது
அவருள் அடை கிடந்தது.

ஒருநாள் அவரை
எதிர்த்தொருவர் முகங்கண்டபோது
சந்தோசமோ... சந்தோசம்.

அவர்கள் ஒருவரையொருவர்
கட்டித் தழுவி
மண்ணிலே வீழ்ந்து
மகிழ்விலே புரண்டு

என்ன வாழ்விது
என்றெனக் கலங்கி
குசலங்கள் பறைந்தனர்.

ஆயினும்...!?

சற்றே நேரத்தில்
ஆழ்கடல் அலைகளாய்
ஏதேதோ எண்ணங்கள் – அவர்
மனதினில் மலைமோத...!?

குசலங்கள் கேள்வியாய்
கேள்விக்குப் பதில்களாய்
பதில்களே கேள்வியாய்...!?

www.padippakam.com



ஓர் சமதளத்தில்
ஓர் விடையத்தினை
ஓர் முடிவுக்காக – அவர்கள்
விளங்க முயன்றும் – அது
முளைவிட்டு...
வேர்விட்டு...
கிளைவிட்டு...

அது அதுவாகவே...
நடுநிலை வசிக்க...!

அது
தன்னுடைய ஆளுமையினை...!
பிரித்தாள்கையினை...!!

சமயோகித ஒற்றுமை – என்ற
முகமூடியுள் ஒளிந்து – அது
தன்னைத் திணித்தது.

அப்படித்தான் அதற்கு
இள மீசை அரும்பி
திடுமென்று தடித்து – அந்த
மயிரிழையின் நுனி முகங்கள்
சூலம்போல்
கூர்களை முறுக்கிய காலம்...

அதனை...
புரிந்துகொள்ளும் பக்குவமாய்
தேடலும்...
சிந்தனையும்...
அறிவாற்றலும்...
தொடர்பு ஊடக மொழியும் – அவரிடம்
தடையாகக் குறையாக வாழும்போது...!?

www.padippakam.com



அவைமீதுதானே குறையினை
சுமத்துதல் சிறப்பு...!

அவை பற்றிய விளக்கத்தினை – அவையே
முன் வைக்காதபோதும் – இந்த
உலகம் உருவாகுதற்கு முன்பே – அந்தக்
கோள்கள்மீதும் – தான்
ஆட்சி புரிவதாக – பல
ஆதாரங்களை முன்வைத்தது முரண்பாடு.

ஆகவே...
இதன் மீதே குற்றத்தினை
சுமத்துதல் நிறைவானது.

இல்லையில்லை... இல்லவேயில்லை
அப்படி இல்லையெனில்...?
எப்படி...?

உள்வாங்கலும் – சிந்தனையும்
தேடலும் – அறிவும்
கருத்தும் – செயலும்
மொழியும் – தொடர்பும்
மனித பக்குவம் – என்ற
இத்தியாதிகளான சூழலை
புரியாத நிலையில்
மனிதர் வாழும்போது
குற்றத்தினை – அந்த
மனித உருவங்களின் மீதே
சுமத்துதல் பூரணமானது...!?

அப்படியும் இல்லையே...?
இந்த உலகு
வளைந்து நெளிந்து கிடந்தாலும் – அதில்

www.padippakam.com



எல்லாமே மனிதர் முன்பாக – அவர்
அகம் புறம் கண்களாய்த் தெரிந்து
பரப்பிக் கிடக்கின்றதே...

நிலையிவை புரியாத
வடிவத்தில் மட்டும் மனிதராய்
மண்ணிடை ஒளிந்து புதைந்த
கலட்டி ஓடாய்
மட்டி மடமையாய் தேறிட – அந்த
நுனியின் இடையிலே – இந்த
முரண்பாடு வந்து
சுற்றிச் சூழ்ந்து – அது
தன்னை சூனியவெளியாய் – ஒரு
சூழ்ச்சிக் கோபுரமாய்
பரத்தி நீட்டி
நெடுத்துக் கிடக்கின்றபோது...

தேடலற்று திறனுமற்று
ஊடலுக்கு மட்டுமவர்
உடல்களை உரசி
வாழ்தலுக்கு மட்டுமவர்
ஊரினையே உண்டிருக்க
காத்திருந்து வளர்த்தெடுத்த
பாத்திருந்து பறித்தெடுத்த
பனங் கிளங்குப் பாத்தி மண்ணே
முரண்செறிந்த பொறி கிடங்காய்
அழைக்கும் எமை ஆங்கே.

இது ஓர் தத்துவமாக்கும்...!?

www.padippakam.com

# அம்மா அடைகிடக்கும் போது சும்மா நீ குழப்பாதே...!

இராமனை... புத்தனை...
மோசேயை... யேசுவை...
முகமதை...

இவர்களினூடாக
ஆதி பகவனைத்தேடி
அவர்களை திருப்பள்ளி எழுப்ப
காண்டா மணிகள்
திக்கெட்டும் அதிர்ந்தது.

இவையேதும் போதாமல்
இறை எம்மில் எழுவாரென
ஒலிபெருக்கி அலறலால்
இறைவருக்கு எழுற்சி படும்...

அவைகேட்டு நாய்கய்...!
மாரடிக்கும் பெண்களாய்
ஒப்பாரி ஓலமிட...

அர்த்த சாமமெலாம் அதுகள்
அலைந்து திரிந்து - இப்போ
அமைதியாய் உறங்கும்போது
இத்தனை கொடுமையிங்கு ஏனோ...!
என்றவை நினைத்தனவோ...!?

என்றும் போலவே இன்றுமவை
ஒன்றும் புரியாது

www.padippakam.com



உறுமலும் குரைத்தலுமாய்
அங்குமிங்கும் அலைந்தோடி
தங்களின் எதிர்வினையை
அவ்வவ்... இடங்களிலேயே
அட்டகாசமாய் ஊளையிட்டு
உடனேயே ஒலிபெருக்கின.

அதனால் இன்றைய நித்திரையும்
நாளை நாளையென
பின் தள்ளிப்போனது.

ம்...
நானெழுந்து முறித்தேன் சோர்வினை
பார்த்தேன் வெளியினை
என்ன அதிசயம்...!
என்றும் போலவே இன்றும்
இருளில் உறங்குகிறது உலகு.

அடடா என்செய்ய...?

எடுத்தேன் கைத் தொலைபேசி
தேடினேன் முகவரி.
எழுதினேன் மின்னஞ்சல்
sooriyakuruvi@planet.comஇற்கு
வந்தது உடன் பதில்.

வெண்காயம்...!
குழப்பாதே என்னை – இது
எனக்கு அடைகிடக்கும் காலம்.

நான் குஞ்சுகள் சிலதை
விரைவில் பொரித்திட வேண்டும்
நீயும் உனது கொத்தளங்களொடு
காத்திரு அதற்காய்.

www.padippakam.com



இங்ஙனம்
சூரியக்குருவிக்காக
தாரகை
ஒப்பம்
செயலகப் பணியகம்.

அதுகும் சரிதான் – ஒரு
சூரி போதாதுதானே – பல
சூரியர் வேண்டத்தான் வேண்டுமே
அதற்காக எங்கள் சூரியக்குருவி
அடைகிடப்பது சரிதானே.

அதுசரி அவளிடம்
கருக்கட்டும் முட்டை
எத்தனை உண்டோ...!?

இதைக் கேட்டு நான்
அவளுக்கு எழுத
மாற்றுக் கோள்களின் யுத்தவூர்தி
குத்தணக் குண்டினை
மழையாய்ப் பொழியுமே.

அதனால்... அவள்
அடை முடிந்து வரும்வரை
நான் பொறுப்பது சரியே.

சரி சரியென ஒருக்கால்
சந்திரசாமியை தேடிப் பார்த்தேன்.

என்ன இழவிது
அவரையும் காணோம்
எங்கேதான் போனாரோ...!?

www.padippakam.com



உடனடி நானும்
தேடினேன் முகவரி
chanthirasaami@planet. com
எழுதினேன் மின்னஞ்சல்...
சந்திரரே வணக்கம்.
சூரியக் குருவி அடையிற் கிடக்கிறாள்
எங்களுக்கோ இருட்டிக் கிடக்கின்றது
நீர்தான் சூள் கொழுத்தியாவது
ஒளியினைத் தாரும்.

நாம்...
உம்முடன் உண்ண
உலாவினில் வாரும்
எம்மிடம் மட்டும் – என
மடக்கினேன் அவரை
என் கணினி வலையுள்
வந்ததே பதில் உடன்...

ஐயா என்ரை ராசா...!
என்னை வடமொன்று வந்து
மொற மொறவென்று கடித்து – என்
புடநிலை அளவில் – அது
விழுங்கி மெல்லுது.

உடனே நீங்கள் தான்
அடியேன் எனக்கு
உதவிகள் செய்திட வேண்டும்.

என் உயிர் பிரியுமுன்
அதன் கடி என்னால்
பொறுத்திட முடியேன்.

www.padippakam.com



உடனடி நீங்கள் தான்
பாம்பாட்டி கொண்டு
மகுடிகள் ஊதி – எனை
பிழைத்திட வேண்டும்.

இவ்வண்ணம்
சந்திரசாமிக்காக
வெள்ளி
ஒப்பம்
செயலகப் பணியகம்.

அழுத்தினேன் www.google.com
தேடினேன் பெரிய பாம்பாட்டியரை
USA யிலிருந்து கிடைத்தாரே
நீல் ஆம்ஸ்ராங் அவர்கள்.

அனுப்பினேன் அவரை
படை கலம் சேர்த்து
மகுடிகள் தாயத்துடன்...

மடைத்தன மனிதரே...!
என்ன நினைத்தனீர் என்னை...!!
கடவுள் முடியில் கிடக்கின்றேன் நானோ...!?
பாம்புவந்து விழுங்குதோ என்னை...!!
ஊம்பிக் கவிப்பொய்
எழுதினீர் எதனால்...!?
தேம்பி அழுது – எனை
வணங்கினாய் எதற்கு...!!?

குப்பி விளக்கிடை
நீதான் கிடக்கிறாயென்று
உந்தனில் மீந்த
தூசு மாசுவை

www.padippakam.com



எந்தனில் கொட்டிட முனையும்
உந்தனின் அறிவை
தட்டித் துலக்கினேன்.

ஆனால் நீயோ
உந்தனின் நித்தரை போனதனால்
எந்தனைத் தேடுறாய் – நல்ல
கல்விப் பட்டறை போகா
மண்ணுடல் மனிதா...

சிந்தனை செயல் பெருக்கும்
திடமான கல்வியற்று
ஏட்டுச் சுரையை
எதற்காக எடுத்தாய் நீ...?

மாட்டு மடுவத்தில்
உனை நீ கட்டி
வாட்டிடும் கனவினால்
தத்துவம் எழுதி
எத்திப் பிழைத்ததை
யோகமாய்க் கண்டு
இயற்கையை மறந்து
ஏதேதோ வணங்கி
ஏனோ நீயே
உனக்குத் திருப்பள்ளி பாடி
போட்டிகளாலே தினமும் சாகிறாய்.

தெரு நாய்களைக்கூட – அதன்
சந்தோசத் தூக்கம்
கெடுத்துத் தொலைக்கின்றாய்.
நாய்க்குக் கடவுள்
நாயாய் இருக்கும்
மரமே தன்னை

www.padippakam.com



அதுவாய்ப் பார்க்கும்
பூச்சி புழுக்கள்
புவிமுதல் அண்டம்
அப்படி இருக்க...

மனிதா மனிதா
அறிவேயுனது முழுமுதற் கடவுள்.
உன்னுள் முதலாய் அதனைத் தேடு.

நாய்கள் பேய்கள்
நரிகள் பரிகள்
ஊர்கள் வேர்கள்
எல்லாமே எல்லாம்
எப்பொழுதும் அமைதியாய்
ஆகிடும் காண்பாய்.

பெரும் ஆழி அலையே – உன்
ஊர்மேல் ஏறாத அணையை
நீயே அமைப்பாய்.

போதும் போதுமென்று
அவ்வப்போது ஒளிர்ந்து தெரியும்
மின்னற் கீற்றில்
அணைந்து தொலைந்த எந்தன்
குப்பி விளக்கை தேடிடும்போது...?

எச்சரிக்கை...!

அம்மா நான் அடை கிடக்கும்போது
எனைச் சும்மா நீ குழப்பாதே.

சூரியக்குஞ்சு.

# மறு பிறப்பு...!

தலைக்கு மேலே தண்ணீர்
காற்றொடு தங்கி வாழும்.

அவை
கருமேகப் போர்வையாக...

மண்ணெங்கள் மணம்வீசி
மசக்கைகொள்ளும்.

அதன்
குணமாற்றும் மழைபெய்து
அடி நிலத்தில் நீர் விளையும்.

அது
கிடக்கும் கிணற்றினுள்ளே
நாம் வாழ்ந்தோம்.

ஆங்கே...!
அரிவாளும் கத்தியும்
மருந்தடைந்த துப்பாக்கியோடும்
பிறர் தங்கள் வலைக் கயிற்றை
கொண்டுநீட்டி
பயத்தைமூட்டி
போதையூட்டி
குளங்களிலே நீராட்ட
கிணற்றைவிட்டு நகர்த்தப்பட்டோம்...

நாமும்
ஏதேதோ புரட்சியாளராக
காட்டாற்றில் கலக்கப்பட்டோம்...

www.padippakam.com



மயக்கம்
மலைப்பு
எதிர்ப்பு
மாற்றம்

இருந்தும்
கிணற்றுள் பிரிந்த
அடிமைத் தவளைகள்
கண்களைத் திறந்து
ஆற்றிலே படகோட்டின.

மிகுதிச் சேற்றிலே
உழண்டிய தவளைகள்

அந்தத் துடுப்பினைத் திருடி
தாமே மாலுமிகள் என்றிட...!?

அனைவரும் இப்போ
மண்ணெமதைத் தினம் தின்று
அலைகின்ற கடலிடை புகுந்து
அல்லோல கல்லோலம்.

புதிதென்ற மரணங்கள்
நிலையிதனால் மாற்றமாக
ஆவியாகி அனைவருமே
சாதி வர்க்க பேதமற்ற
மனிதரென்ற நீரேயாகி
வருவதற்கே வேண்டுமோர்
மறுபிறப்பு...!!?

பாடல்:

# எந்தன் தென்றலே நீ வீசி வா

(தொகையறா)

எந்தன் தென்றலே நீ விசி வா
எந்தன் முன்றலில் நீ வீசி வா
எந்தன் மண்ணிலே நீ வீசி வா
எந்தன் தென்றலே நீ வீசி வா

(பல்லவி)

பொழுதான பொழுதெங்கள் கரியானது – எம்
கரையாலே அலைவந்து உயிர் போனது
தடையான குண்டாலே உடல் போனது – எம்
மடலான தளிர் வாழத் தடையேன் இது.

பலநாடு ஊர்சாகத் துணைபோனது – எம்
மனிதர்கள் தனிவாழத் தடையானது
தடையான வாழ்வெங்கள் புதிரானது – அது
புதிராகிப் பொலிந்தாலும் எமதானது
அவை... எமதானது
அவை... எமதானது

எந்தன் தென்றலே நீ வீசி வா
எந்தன் முன்றலில் நீ வீசி வா
எந்தன் மண்ணிலே நீ வீசி வா
எந்தன் தென்றலே நீ வீசி வா

புதரான காடெங்கள் புலமானது
புதிரான காலங்கள் வரலாறது – அதில்

www.padippakam.com



வதைவந்து போனாலும் தமிழாயிரு – போர்
களம்நொந்த தமிழென்றும் அழியாதது.

நாம் சாகும் காலங்கள் பலதானது
எம் கோலங்கள் தீசுட்ட வடுவானது – புது(த்)
தேடல்கள் இனியென்றும் மிகைதேடுது – நல (ச்)
செயலாலே நாம் நாடி நலமாவது.

புத்தம் சரணம் கச்சாமே
சங்கம் சரணம் கச்சாமே
தர்மம் சரணம் கச்சாமே
நித்தம் நாங்கள் செத்தோமே
யுத்தம் எங்கள் சொத்தாமே.

வேண்டாம் வேண்டாம் யுத்தம் வேண்டாம்
வேண்டடும் வேண்டும் அமைதி வேண்டும்
வேண்டாம் வேண்டாம் பகையோ வேண்டாம்
வேண்டும் வேண்டும் மனிதம் வேண்டும்.

# இருள்...!

இருள்...!!
எங்கும் இருள்
எங்குமே இருள் - அந்த
இருள் தின்ற இரவுகளில்
மதி நின்று காவல் செய்யும்
அந்தப் பொழுதுகளில்
எங்கள் வயல் நிலத்தில்
பாலக நிலாச் சொரிய
வானம் தன் நிலைமாற்றும்.

ஆங்கே..!
முகிலினங்கள்
முத்தமிட்டு மின்வீசும்.
தாம் தோமென
இடியிடித்துத் தாளமிடும்.

அதன் காலாய்
கருவான முகிற் கூட்டம்
உருமாறித் துளித் துளியாய்
தூறித் தூறி
தூவானமாகி
வரவாடும் பெரு மழைக்கு..

இப்படியே..
வானம் தான் தாவிவந்து
நீரினை நிலத்தில் தூறி
மெல்லத் தன் காதலை
சொல்லிக் கொள்ளும்.

www.padippakam.com



எப்போதுமே...
வான் பார்க்கும்
எங்கள் ஏமாந்த நிலமடந்தை
அதனுடனே இணங்கி வாழ
எத்தனங்கள் மேலாய்க் கொள்ளும்.

ஆனாலும்.. வானமோ...!
வேற்றுக் கோள்களே
அதிகமாய் அழகென - தன்
மனதினைச் சட்டென
மாற்றிச் செல்லும்.

ஆதலால்.. நிலமடந்தை..!!
வான்மீது கோபம் கொள்ளும்.

ஆத்திரம் கொண்ட மேகம்
சூரிய அடியாள் மூலம் - எம்
பாரிலே உள்ள நீரை - மீண்டும்
வானிலே கொண்டு சேர்க்கும்.

ஆயினும்... ஆயினும்...

மீண்டும்...! மீண்டும்...!!
மீண்டும் மேகம் வந்து
பூமிமேல் காதல் கொள்ளும் - பின்பு
நீர் நிலைகள்
ததும்பிக் கொள்ளும்.

எம் தாகம் தணிந்ததென்று
நகர்வனவும் பறப்பனவும்
அவைபோன்ற அத்தனையும்
பண்ணிசைத்துப் பாவோதும்.
எங்கள் முற்றத்து முன்றலில்

www.padippakam.com



மல்லிகையும் தேமாவும்
மலர்பூத்து மணம் பரப்பும்.

இன்பங்கள் துன்பங்கள்
எத்தனை.. எத்தனையோ
அத்தனையும் மறக்க வைத்து - எங்கள்
அம்மாவின் நூற்சேலை
நித்திரைக்குள் எமை ஆழ்த்தும்.

ஆங்கே.. தென்றற்காற்று
தானாகத் தேடிவந்து
நனவாக பல கனவை
மறுநாளின் விடியலே நேரிணைக்க..!!
................

காலை எழுந்தது - இளம்
காலை எழுந்தது
காலை எழுந்தது - இளம்
காலை எழுந்தது

சேவலொன்று சிறகடித்துக் கூவுகின்றது - உடன்
சேர்ந்து பல சேவல்களும் கூவுகின்றது
குருவியொன்று மரமிருந்து பாடுகின்றது - உடன்
சேர்ந்து பல குருவிகளும் பாடுகின்றது
ஊரெழுந்து கதிரவனைத் தேடுகின்றது - இந்த
உலகுருண்டு சூரியனை நாடுகின்றது

காலை எழுந்தது - இளம்
காலை எழுந்தது

கீழ்த்திசையின் ஓரத்திலே ஒளிதெரிந்தது - அந்தோ
கீழ்திசையின் ஓரமெல்லாம் அதுபரந்தது
கிழக்கினிலே செம்பருத்தி ஒளிருகின்றது - அது
கீழ்க்கரையின் கடல்மேலே படருகின்றது

கோவிலிலே மணியொலித்து அதிருகின்றது - பல
கோயில்களில் மணியொலித்து கணருகின்றது
நாயொன்று எழுந்துநின்று குரைக்கின்றது - ஊர்
நாய்களெல்லாம் சேர்ந்துநின்று குரைக்கின்றது

அடுப்பொன்று அனல்வீசி எரிகின்றது - அந்த
ஊராரின் அடுப்பெரிந்து கனல்கின்றது
எருதொன்று இரைமீட்டிப் புசிக்கின்றது - அதன்
இணைநின்று சலம்போக்கி மகிழ்கின்றது
ஆறொன்று ஊரோரம் பாய்கின்றது - அது
அணைமுறித்து ஊர்மேயப் பார்க்கின்றது
இராநின்ற மதியெங்கோ காய்கின்றது - அதை
தேடியெங்கள் செய்மதியும் செல்லுகின்றது

காலை எழுந்தது - இளம்
காலை எழுந்தது

இராத்திரியின் கரியொளியில் படகேறினர் - அவர்
கடற்கனியைப் பிடிக்கவென அலைமோதினர்

உழவர்களும் ஏரெடுத்துப் போகின்றனர் - அவர்
நிலமுழுது பயிராடப் போகின்றனர்
பொழுதொன்று போராடப் புலர்கின்றது - நாம்
போராடிப் பொழுதொன்று புலர்கின்றது

பசுவொன்று கன்றணைத்து முகர்கின்றது - அது
பால்நிறைந்த முலைசொரிந்து மகிழ்கின்றது

மங்கையரும் நீராட வருகின்றனர் - அவர்
நீராடி வீடேகிச் செல்கின்றனர்
மலர்சுமந்து மழலைகளும் செல்கின்றனர் - அவர்
புது உலகைப் படைக்கவென்று செல்கின்றனர்
காலை எழுந்தது - இளம்

www.padippakam.com



காலை எழுந்தது

காகமொன்று கரைந்தடித்துப் பறக்கின்றது - அதன்
கூட்டிலொரு குஞ்சிருந்து கூவுகின்றது
அணிலொன்று கிளைதாவிப் பாய்கின்றது - அது
மா... மரத்தில் புழுங்கோதப் பார்க்கின்றது
பனித்துளிகள் புல்நுனியை வளைக்கின்றது - அதில்
முத்தான ஒளிதெறித்து மிளிர்கின்றது

எலியொன்று வளையோரம் திரிகின்றது - அதைப்(ப்)
பிடிக்கவென கரும்பூனை நகர்கின்றது
முயலொன்று செவிதூக்கிப் பார்க்கின்றது - அதைப்(ப்)
பிடிக்கவென பருந்தொன்று முயல்கின்றது
முற்றத்தில் தாய்கோழி மேய்கின்றது - அதன்
குஞ்சொன்று இடம்மாறிப் போகின்றது

காலை எழுந்தது - இளம்
காலை எழுந்தது

வான்பரப்பில் ஒலியேதோ கேட்கின்றது - அது
பனைகளிடை சிறிதாகத் தெரிகின்றது
குஞ்சதனைப் பருந்தாடிப் போகின்றது - அதை(த்)
தாய்க்கோழி பறந்தோடிப் பறிக்கின்றது
முகமனைத்தும் அதுநோக்கிப் பார்க்கின்றது - எம்
விழிகாக்கும் இமைமூட மறுக்கின்றது

வான்பறந்து கலமொன்று வருகின்றது - அதில்
நீள்துவக்கு நிலம் நோக்கிப் பார்க்கின்றது
ஒளிப்பிளம்பு அதனூடு பாய்கின்றது - அதன்
ஒலியதிர்ந்து ஊர்பலதும் கேட்கின்றது
பெருங்குண்டு நிலமெமதில் வெடிக்கின்றது - அவை
வெடித்து.. உயிர்களினை.. அழிக்கின்றது

www.padippakam.com



தென்னைபனை வட்டுடைந்து முறிகின்றது - அந்த
நிலமீது தீ பிடித்து எரிகின்றது

காலை எழுந்தது - இளம்
காலை எழுந்தது

ஆற்றில்நீர் சிவப்பாகிப் பாய்கின்றது - அதன்
அருகெல்லாம் நிலையழிந்து வேகின்றது
ஊரெல்லாம் பேயாட்டம் நடக்கின்றது - அதை
ஊடகங்கள் பாரெல்லாம் பறைசாற்றுது

முகமொன்று விழியின்றிப் பார்க்கின்றது - அந்த
நிலைகண்டு முடமொன்று மலைக்கின்றது
தலையற்ற உடலொன்று நடக்கின்றது - அதை
பிணமென்று சொல்லத்தான் - இந்த(க்)

கா.லை. எ.ழு.ந்.த.து - இ.ள.ம்
கா.லை. எ.ழு.ந்.த.து
கா.லை. எ.ழு.ந்.த.து - இ.ள.ம்
கா.லை. எ.ழு.ந்.த.து...!

....................

அழகான காலையிது
அமைதியாய் தானேக
அற்றவர்க்கும் உற்றவர்க்கும்
அண்டத்தின் உயிர்களுக்கும்
அச்சுடைந்து பிசகாது
அசைகின்ற பூமியிலே...!

எப்போதும் போலின்றும்
ஒளிவீசும் செம்பருதி
முழி பிதுங்கி

www.padippakam.com



விழி கலங்கி - எம்
பிணம் எரிக்க வந்தனையோ....!!

அரசென்றால்...!
மக்கள் மனைகளுக்கு - அதன்
ஆட்சியரே வழிகாட்டி...!?

இன்று...!?
அவர்களே அடக்குமுறையால்..!
அவர்களே ஆயுதத்தால்...!!
அவர்களே சதியின் வாயால்...!!!

கா.லை. எ.ழு.ந்.த.து
கா.லை. எ.ழு.ந்.த.து - இ.ள.ம்
கா.லை. யொ.ன்.று மா.லை.யா.கி - எ.ம்
வா.ழ்.வு கு.லை.ந்.த.து.

# மரம் காய்க்கும் மனிதம் வேண்டும்...!

பக்கமெலாம் கடல் சூழ்ந்து
சிறு முத்தாய்க் கிடக்கின்ற
மண் வகையின் வெளியினிலே
உவர்ப்புக்கோ பஞ்சமில்லை.

எத்தனையோ கனிமங்கள்
அருந்தலாகப் பொழிகின்ற
மழை நீரில் கரைந்தோடி
அடி நீரும் அதுவான
அந்த நிலமீது

வேரோடி முகையெடுத்து
உயிரான மரமொன்று
பூக்காது காய்க்காத
முடமான மலடாகி
பொதுவாக மரத்துப்போச்சு..!?

அதன் வடிவழகோ...!
இலை சுருங்கி
கிளை சூம்பி
என்புருக்கி மனிதராக
அந்த மரம்
அழுது வடியும்.

இந்த இலட்சணத்தில்
அதன் கிளைகளிலோ
குருவியிட்ட மலக்கூறு
அதில் எகிறி ஊடறுத்து
வேர் இறுக்கி...?

www.padippakam.com



பசி பிணியால் உளல்கின்ற
பேக்கிளாந்தி நாடுகளில்...
மேற்கத்தைக் கோட்டான்கள்
காலனியக் கன்னமிட்டு
உயிரிருக்க ஊன் குடிக்கும்
உலக வங்கிக் கணக்குப்போல்
குருவிச்சைக் கொடிபடர்ந்து
அதன் ஊன் குடித்து
மத மதக்கும்.

அதனிடையே குருவியினக் கூடிருக்கும்
அதனுள்ளே சிலகுஞ்சு தலைநீட்டும்...
அப்போதும் அந்தமரம் முகையெடுக்கும்...!

என்றாலும்
அந்தமரம் பூமலர்த்தி
காய்கண்டு கனியுதிர்த்தி
தன் விதை பரப்பி
இனம் தனைப் பெருக்கிடத்தான்
முயற்சிமேல் முயற்சிக்கும்...!

ஆனாலும்...! ஆனாலும்...!!
நிலநீரில் மண்முழுதாய்
கலந்திருக்கும் கனிமங்கள்
அந்தமர மரபணுவில்
கலந்திருந்த நிலையதனால் - அதில்
பூமலர்த்த மறுத்துரைக்கும்.

இச் சூட்சுமங்கள்...?
புரியாத மனதெனது
மரமதனைத் தறித்தெறிய
ஏதேதோ தேடிச் செல்லும்.
என்னத்தைத் தேடுகின்றேன்...?

www.padippakam.com



அரிவாளை... கோடரியை...
எதற்காக அது எனக்கு...!?

அறுக்கவேண்டும்...! தறிக்கவேண்டும்...!!
என்ன...?
காலத்தே காய்க்காத - தன்
கோலத்தை மாற்றாத
தேவை எந்தனை
புரியாத மரமதனை...!?
அறுக்கவேண்டும்...! தறிக்கவேண்டும்...!!

ஐயையோ... ஐயோ...
மரமது காய்க்காதோ...!?
நிலையது அறியாயோ
மடைப்பயலே...?

ஆழ்நீரும் - மண்வகையும்
புலமீது உப்புவர்ந்த
மரமதனின் குறையறிந்து
உழுத்தமண் உவர் போக்கும்

உரியவை சேர்த்தாங்கே
உள்வள மாற்றஞ்செய்...

அதற்கான தேடலினை
நிலமெலாம் தேடிச்செல்...

அதுவரைக்கும்...
அறுக்காதே அறுக்காதே
மரமதனைத் தறிக்காதே.

18.06.2006

# நானுறங்கி நாளாச்சு...!

சொந்தமெனும் மண்ணெனதில்
காயடித்துக் கருகிப்போன
வாழ்வெமதை தேடிப்பிடித்து
வாழ முனைந்தோரையும்...

முடியாதோவென
பேந்தப் பேந்த முழித்தோரையும்
மூளை முளைக்காத
ஆயுத அதிகார தாரிகளே
அடக்கியாண்டு
ஆழச் சிதைத்த வாழ்வெமதை
திக்கற்ற முட்டுச் சந்திக்கு
இட்டுச் செல்ல...!

... அந்த பேயாட்சி
நடக்கின்ற நாடகன்று
இனங்கொன்று அல்லாடி
நற் தீர்வாகும் நடைமுறையை
நாடி வாழும் புவிதேடி
நானுந்தான் – இந்த
தேனாட்டுத் தெருக்கமுவ...

வெளிநாட்டுச் சிப்பமாகி
எதிர்வறியா ஏதிலியாய்...!?
பாட்டாச் சப்பாத்தும்
படாடோப உடைபோர்த்து
ஒரு பெரும் சீமானாய் வந்தவனே.

www.padippakam.com



இங்கு வந்து
இவர் வாழ்வை சீண்டியபின் – அவர்
சுயம் இழக்க – நான்
காரணமோ என்றான...

நீ உன்ரை நாட்டுக்கே போ – என
நீளும் நடு விரற்கையின்
நீட்சி வசை மொழியாலும்...
இன்னுமான மன வதையாலும்...
இந்தக் குளிர்க் காட்டில்...

எதற்கோ...
என்னத்தினாலோ...
எப்படியோ...
அடிமைபோன்று ஆனபின்பு
முடியவில்லை...! முடியவில்லை...!!

எந்தன்
புல்மண்டும் நிலமுழுது
அதன் மேலே
மணிமணியாய் நெல் தூவி
அவையொடு மனம்விட்டு
பேசிப் பேசி – அந்த
தாமரைத் தடாகத்தில்
உடல் குளித்து
கோயிலடிச் சிறு கடையில்
அரிசிமாத் தோசை தின்று
கடலை கச்சான்
சோளப்பொரி கொறித்தவாறு – எந்தன்
தோப்பிழந்த பனங்காணியிடை
ஒரு வட்டம் சுற்றிவந்து , அந்த

www.padippakam.com



மணற் தரையின்
ஒற்றயைடிப் பாதையிலே பதியும் , எந்தன்
பாதச் சுவடுகளைப் பார்க்கையிலே – என்
மணங் காணும் இன்பத்தை
காணோமே எங்கும்.

மலரான மஞ்சத்தில்
உடல் கிடந்தும்
மனதெனது
தினந்தோறும் வலிக்கிறதே – அந்த
பனையோலைப் பாய்மேலே
படுத்துப் புரண்டாடும்
வாழ்வைக் கொண்டாட – என்
மனதுக்கு விருப்பமாய்...!

12.03.2008

படிப்பகம்

# தேற்றம் என்றால்

ஒளியும் ஒருபொழுதில் ஒதுங்கிப் போகிறது
இருளும் இதனிடையே ஒளிந்துகொள்கிறது
பெரும் சூறாவளியே – இனிய
தென்றலுள்ளேதான் உறங்கிக் கொள்கிறது

இவைபோன்றனவே...

கருவும்
உருவும்
உயிர்ப்பும்
இறப்பும்
மனிதமுமாய் – ஏன்
பிரபஞ்சமே மாற்றங்களினால் தான்.

எந்தவொரு புதிய உரு ஆக்கத்திற்கும்
ஏதோ ஒன்றின் அழிவும் முக்கியமாகிறது – இது
நியதியும் நிரந்தர இருப்புமேயாம்.

ஆக...

இவற்றிடைதான் அனைத்துமான
வட்டங்களும் – சதுரங்களும்
கூம்புகளும்– உருளைகளும்
ஈர்ப்பும் – பிரிப்பும்
மீள்வும் – மாழ்வும்
அடக்கமும் – சீற்றமும்
இணைவும் – அறுப்பும்
போரும் – அமைதியும்
பிறப்பும் – இறப்பும்

www.padippakam.com



சூனியமும் – நிறைவும்
நிறைவே சூனியமாய்
இவையெலாம் இசங்களாய்...

இன்று
நிசங்களாய் இருப்பதே
எங்கும் எதிலும்
என்னும் பலவாக
புனைந்து கிடக்கிறது என்பதே
தேற்றம்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



'நனவெரிந்த சாம்பலில்' கவிதைகளின் படைப்பாளி பொழுதுபோக்குகளுக்காகவோ அல்லது போலித்தனங்களுக்காகவோ கவிதை எழுதும் கவிஞர் அல்ல. இவர் மட்டுமல்ல இவருடைய கவிதைகளும் தனித்துவமானவை.

இவர் பயன்படுத்தும் படிமங்கள், பதப்பிரயோகங்கள் என்பன புதுமையானவை.

உதாரணமாக நிலவினை காதலியாகப் பார்த்தவர்கள் உண்டு காதலுக்கு உதவியாக நிலவினை அழைத்தவர் உண்டு. ஆனால் இவர் அதே நிலவினை தன் மாமன் என்று உறவு கொண்டாடுகின்றார். 'நிலவுண்ட நெத்தலிச் சொதி' என்ற கவிதையில்...

இந்த வெளியூடே
எம் வயல் வெளி நிரம்பி
அடி நிலாக்கள்
கசிந்தோடும் நிலவது
எனதினிய இரத்த உறவு
மாமன் எனக் காட்டி...

இதனைத் தொடர்ந்து செல்லும் இவரது கவிதையில் வட புலத்து இருளிடையில் மறைந்துபோன இவரது மாமனை நீண்ட காலம் காணவில்லையாம்...!?

அதனைத் தொடர்ந்து இவர் பயன்படுத்தும் பின்வரும் வரிகள் சொத்தாதிக்கம், தனிமனித உரிமைகள், சமத்துவம் பற்றி எம்மைச் சிந்திக்க வைக்கின்றது.

ISBN 978-87-995026-0-8

9 788799 502608

படிப்பகம்